அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams
North America
SINCE 1988

இலையுதிர் மலர்

# அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2054 / ஐப்பசி / நவம்பர் 2025




Federation of Tamil Sangams
North America
SINCE 1988
New Jersey Tamil Peravai
FITEN
FeTNA International Tamil
Entrepreneur Network
GLOBAL TAMIL ENTREPRENEURS
SUMMIT 2026
SAVE the DATE
JANUARY | 17 | 2026 | SATURDAY
@ COIMBATORE
FITEN
KOVAI
2026
www.fetna.org | www.fiten.org

# அருவி

## உள்ளே...


| | |
|---|---|
| பேரவைத் தலைவர் மடல் | 5 |
| பேரவைச் செயலாளர் மடல் | 6 |
| ஆசிரியர் மடல் | 7 |
| வாழ்த்து மடல் | 9 |
| வரலாற்று வெற்றியில் இணைந்த கரங்களுக்கு... | 11 |
| கண்ணுக்கு எட்டா காதல்! | 15 |
| சிகாகோ தமிழ்ச் சங்கம் | 16 |
| கிரேட்டர் ஹூஸ்டன் தமிழ்ச் சங்கம் | 18 |
| தமிழர் பண்பாட்டில் சமத்துவம் | 20 |
| வேலுநாச்சியார் | 22 |
| ஒற்றைச் சருகாய் | 24 |
| மில்வாக்கி மாநகர தமிழ்ச்சங்கம் | 25 |
| நாவிலே இனித்து உயிர் நாடியைப் பிடிக்கும் | 26 |
| நல்லதோர் வீணை | 28 |
| வள்ளுவரும் இயற்கையும் ஒரு பசுமைச் சிந்தனை | 30 |
| மல்லிகை பந்தல் | 32 |
| மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டம் | 34 |
| மழையின் மீது காதல்! | 37 |
| ஓவியங்கள் | 38 |
| மினசோட்டாத் தமிழ்ச் சங்கத்தின் மறக்க முடியாத இந்திய சுதந்திர நாள் விழா நிகழ்வு | 39 |
| விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம் | 40 |
| தமிழர் வாழ்வியலில் கலையும் இலக்கியமும் தாக்கமும் சாத்தியங்களும் பேரவை விழா-இலக்கிய இணையமர்வு | 41 |
| யாதுமாகி நின்றாய் தமிழே! கவியரங்கம் | 44 |
| கவியரங்கம் (FeTNA) தொடக்கம் | 45 |
| யாதுமாகி நின்றாய் தமிழே!: அருள்ஜோதி முரளிதரன் | 46 |
| யாதுமாகி நின்றாய் தமிழே!: இரம்யா ரவீந்திரன் | 47 |
| யாதுமாகி நின்றாய் தமிழே!: கண்ணுத்துரை லோகேந்திரன் | 49 |
| யாதுமாகி நின்றாய் தமிழே!: கார்த்தீஸ்வரி வாழவந்தான் | 51 |
| யாதுமாகி நின்றாய் தமிழே!: ம.வீ.கனிமொழி | 52 |
| யாதுமாகி நின்றாய் தமிழே!: சிகாகோ பாஸ்கர் | 54 |
| யாதுமாகி நின்றாய் தமிழே!: ராஜராஜன் லெட்சுமிகாந்தன் | 56 |
| யாதுமாகி நின்றாய் தமிழே!: கார்த்திக் பாலசுப்பிரமணியன் | 58 |
| கவியரங்கம் நிறைவு: | 59 |
| ஒற்றைச் சிறகு ஓவியா நாவலுக்கு பாலசாகித்ய புரஸ்கார் விருது – 2025 | 61 |

# ஆசிரியர் குழு



**திருமலைஞானம் சிவஞானம்**
ஆசிரியர்
ரோசெஸ்டர் ஹில்ஸ், மிச்சிகன்



**மலர் நடராஜா**
இணை ஆசிரியர்
வடகொரலைனா



**Dr.வைத்திநாதன் செல்வராஜ்**
இணை ஆசிரியர்
மேடிசன், விஸ்கான்சின்



**ஜான்சிராணி பிரபாகரன்**
பேரவை இணைச்செயலாளர்
விஸ்கான்சின்



**பிளாரன்ஸ் கிறிஸ்டோ**
துணை ஆசிரியர்
அட்லாண்டா



**சுபா காரைக்குடி**
துணை ஆசிரியர்
நியூஜெர்சி



**நாகராஜன் ராஜேந்திரன்**
துணை ஆசிரியர்
மேசன், ஓஹியோ



**இந்துமதி ஜெயபால்**
துணை ஆசிரியர்
டப்ளின்



**கனகப்பிரியா சங்கர்ராஜ்**
துணை ஆசிரியர்
ஃபிரிஸ்கோ, டெக்சாஸ்



**வீரா கந்தசாமி**
துணை ஆசிரியர்
நியூயார்க்



**அருள்மொழி**
துணை ஆசிரியர்
சியாட்டல், வாஷிங்டன்



**விஜயகுமார் ரங்கசாமி**
துணை ஆசிரியர்
ஸ்பிரிங் ஹில்ஸ், டென்னஸி



**சுப்ரமணிய பெருமாள் திருநாவுக்கரசு**
துணை ஆசிரியர்
சால்ட் லேக் சிட்டி, UTAH

# தலைவர் மடல்

பேரன்புடையீர்,

வணக்கம்!

தமிழால் இணைவோம், தமிழராய் வாழ்வோம்" என்ற முழக்கத்தோடு கேரொலைனா தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து, வட கேரொலைனா மாகாணத்தில் இராலே நகரில் கடந்த சூலை 3, 4, 5 ஆகிய நாள்களில் முன்னெடுக்கப்பட்ட, நம் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் (FeTNA) முப்பத்தி எட்டாவது தமிழ் விழா தங்கள் அனைவரின் பேரன்புடனும், பேராதரவுடனும் மிகச் சிறப்பாக நிறைவுபெற்றது என்பதை பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

– என்ற வள்ளுவன் வாக்கின்படி உலகின் பல கண்டங்களில் இருந்து, ஏறக்குறைய 3000–க்கும் மேற்பட்ட தமிழர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் கலந்து கொண்டு மொழி, கலை, இலக்கியம், விளையாட்டு, தொழில்முனைவு எனப் பல்வேறு துறைகளைக் கொண்டாடியது அனைவருக்கும் ஒரு மறக்க முடியாத இனிய நினைவாகவே அமைந்தது. திக்கெட்டும் சூழ்ந்திருந்த தமிழ் அன்பு நெஞ்சங்களால், திகட்டாத தமிழமுதம் சொரிந்து கொண்டே இருந்ததைக் காண விளைந்தது. மீண்டும் ஒருமுறை, உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் வலிமையான பாலமாக பேரவையின் இவ்விழா திகழ்ந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

"பெண்களின் தலைமை" – பேரவை வரலாற்றில் முதன்முறையாக, கேரொலைனா தமிழ்ச் சங்கத்திலிருந்து இரு பெண் ஒருங்கிணைப்பாளர்கள் – திருமதி மீனா இளஞ்செயன் மற்றும் திருமதி பாரதி முருகேசன் தலைமை ஏற்று இவ்விழாவை சிறப்பாக ஒருங்கிணைத்து சாதனைப் படைத்தனர். அவர்களின் அயராத உழைப்பும், உறுதியும், அர்ப்பணிப்பும் இவ்விழாவின் வெற்றிக்கு முதன்மையான காரணமாக அமைந்தது என்பதை இங்கு மிகுந்த மகிழ்ச்சியோடு நினைவு கூறுகிறேன்.



"புதிய தலைமுறைக்கான விதை" – மாமதுரையில் தொடங்கிய தொழில்முனைவோர் மாநாட்டின் தொடர்ச்சியாக, இவ்விழாவிலும் பன்னாட்டுத் தமிழ் தொழில்முனைவோர் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. இது, புதிய தலைமுறைக்கு ஊக்கமும் நம்பிக்கையும் விதைத்த தருணமாக அமைந்தது என்பதில் ஐயமில்லை.

"நூற்றாண்டு நினைவுகள்" – தமிழுக்காகவும், சமூக நல்லிணக்கத்திற்காகவும் வாழ்ந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் மற்றும் எளிய மக்களுக்காகவும், பொதுவுடைமை சமூகத்திற்காகவும் உழைத்த தோழர் இரா. நல்லகண்ணு ஆகியோரின் நூற்றாண்டு விழாக்களை, இவ்விழாவோடு ஒருங்கிணைத்தது மட்டுமின்றி பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட அவர்களின் ஆவணப்படங்களை முதன்மை அரங்கில் ஒளிபரப்பச்செய்தது பெருமைக்குரிய, மன நிறைவான நிகழ்வாக திகழ்ந்தது.

"நிகழ்ச்சி சிறப்புகள்" நிகழ்ச்சி என்பது வெறும் கூடுகை அல்ல; அது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கான மேடை. நிகழ்ச்சிகள் வழியாக திறமைகள் வெளிப்படுகின்றன, புதிய சிந்தனைகள் பரிமாறப்படுகின்றன. அவ்வாறே நம் நிகழ்ச்சிகளும் இருந்தன என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி எனக்கு. தொழில்முனைவோர் மாநாடு தொடங்கி பன்னாட்டுத் தமிழ்த் திரைப்பட விழா, தனித்துவமான மருதிருவர் வரலாற்று நாடகம், இளையோர் நிகழ்வு, தமிழிசை, கவியரங்கம், கருத்துக்களம், இலக்கிய விநாடி வினா, தமிழ் அமெரிக்க முன்னோடிகளுக்கான அழகிய தமிழ் பெயரில் விருதுகள், உலகத் தமிழர் நேரம், தமிழ் அவசர கால உதவி(Tamil ER) நிகழ்வு, விளையாட்டுத் திருவிழா,

வட அமெரிக்க வாகை சூடி – நாடளாவிய போட்டிகள், பல்வேறு பரிமாண கருத்தியல் ஆளுமைகளின் இணையரங்க அமர்வுகள், சங்கங்களின் சங்கமம், கலை நிகழ்ச்சிகள், முதன்மை அரங்க மேடையில் பரிசளிப்பு மற்றும் தன்னார்வலர்கள் கௌரவிப்பு, கீழடி மெய்நிகர் சுற்றுலா, மரபுக் கலை நிகழ்ச்சிகள், இசையமைப்பாளர் டி. இமான் வழங்கிய மெல்லிசைக் கச்சேரி எனப் பல்வேறு நிகழ்ச்சிகள் தமிழரின் திறமையையும் கலையையும் பண்பாட்டையும் ஒற்றுமையையும் உலகிற்கு பறைசாற்றும் விதமாக அமைந்தன.

பரந்த மாநாட்டு அரங்குகள் ...
அரங்கம் நிறைந்த அமர்வுகள் ...
ஆர்ப்பரிக்கும் தமிழ் முழக்கங்கள் ...
கவின் தமிழில் தகவல்கள் ...
அகனமர்ந்த விருந்தோம்பல் ...
முகனமர்ந்த உரையாடல்கள் ...
குழுக்களின் இடையறா பணிகள் ...
தன்னார்வலர்களின் அயராத உழைப்பு
– என அனைத்தும் விழாவை சிறப்பித்து மகுடம் சூட்டின.

**"நன்றிகள்"** – இவ்விழாவினை வெற்றிகரமாக நடத்த பொருளுதவி வழங்கிய நன்கொடையாளர்கள், வணிக நிறுவனங்கள், நண்பர்கள், நலம் விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகள் பல. எடுத்து வைக்கும் அடிகளில் எந்த இடையூறுகள் வந்த போதும் தளராமல் இவ்விழாவை சிரமேற்று நடத்த இரவு பகலின்றி இடையறாது உழைத்த ஒருங்கமைப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், தன்னார்வலர்கள், பேரவையின் செயற்குழு மற்றும் 31 குழு தோழமைகள், கேரொலைனா செயற்குழு மற்றும் குழு உறுப்பினர்கள், தமிழ்ச்சங்க ஆர்வலர்கள் என அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன். விழா முடிந்து ஒரு திங்களுக்கும் மேலாக, நெஞ்சம் நெகிழும் வண்ணம் வந்துகொண்டிருந்த உங்கள் பாராட்டுகளுக்கும் வாழ்த்துரைகளுக்கும் கருத்துகளுக்கும் நன்றிகள்!

**"39-ஆவது தமிழ்ப்பெருவிழா"** - பேரவையின் அடுத்த தமிழ் விழா நியூசெர்சி தமிழ்ப் பேரவையுடன் இணைந்து பூங்கா நகரமான நியூசெர்சியில் வருமாண்டு சூலை 2, 3, 4 நாட்களில் நடத்த திட்டமிட்டுள்ளது நீங்கள் அனைவரும் அறிந்ததே. இதற்கான தொடக்க ஏற்பாடுகள் தொடங்கிவிட்ட இவ்வேளையில் தமிழ் கூறும் நல்லுள்ளங்கள் அனைவரையும் இவ்விழாவிற்கு வரவேற்று தங்களின் மேலான ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் அனைவரின் பங்களிப்பும் பேராதரவும் நம் அடுத்த விழாவையும் வரலாற்றில் கோலோச்சச் செய்யும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.

**"பன்னாட்டுத் தமிழர் தொழில் முனைவோர் மாநாடு"** — எதிர்வரும் (2026) சனவரி 17-ஆம் நாள் கோவை மாநகரில் நடைபெற உள்ள பன்னாட்டுத் தமிழர் தொழில்முனைவோர் மாநாடு, உலகத் தமிழ் தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள், புத்தாக்க ஆர்வலர்கள், திறம்மிகு இளைஞர்களை ஒருங்கிணைத்து தொழில் உருவாக்கம், வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான தளமாக இருக்கும்.

**"தமிழிசை விழா"** — வரும் டிசம்பர் திங்கள் 29-ஆம் நாள் சென்னையில் 13ஆம் ஆண்டு தமிழிசை விழா நடைபெற இருக்கிறது. இசையும் இலக்கியமும் சங்கமிக்கும் விழாவாக அது அமையும்.

இந்நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொண்டு உங்கள் ஆதரவை நல்க அன்போடு அழைக்கிறேன்.

"தமிழ் என்பது நம் அடையாளம், நம் உயிர். நின்று வெல்லும் தமிழ்" -என்ற அடிப்படையில், உலகத் தமிழர்களின் மனத்தில் பெருமையையும் ஒற்றுமையையும் விதைத்துவிட்டோம்" என்பதில் பேருவகை எனக்கு.

நின்று வெல்லும் தமிழ்!

அன்புடன்,

விஜய் மணிவேல்

**தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.**

# பேரவைச் செயலாளர் மடல்

அன்புள்ள தமிழ்ச் சமூகத்தினருக்கு,

வணக்கம்.

கடந்த ஓர் ஆண்டில் எங்கள் பேரவையின் சாதனைகளைப் பெருமையுடனும் நன்றியுடனும் உங்கள் முன் வைக்கிறேன். “ஒன்று பட்டாலுண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு!” – என்ற ஒற்றுமையின் வலிமையைக் கூறும் பழமொழிக்கேற்ப, உறுப்பினர் சங்கங்களின் ஒருங்கிணைந்த உழைப்பு, தளராத ஆதரவு, வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சித் திறன் ஆகியவற்றால் இந்த ஆண்டு ஒரு சிறந்த ஆண்டாகவே அமைந்தது.

பேரவையின் வரலாற்றில் முதல் முறையாக, இயக்குநர் குழு மற்றும் பொதுக்குழு கூட்டக் குறிப்புகள் தொடர்ந்து உறுப்பினர்களுடன் பகிரப்பட்டன. பொருளாளர் மாற்றம் நேர்த்தியாகவும், காலத்துக்கு ஏற்றாற்போலும் நிறைவேற்றப்பட்டு, நிதி மேலாண்மை மேலும் வலுப்பெற நிதிக் குழு அமைக்கப்பட்டு, நிதி ஆலோசகர் வழிகாட்டுதலும் பெறப்பட்டது.

2025 ஆம் ஆண்டு வட கேரொலைனா மாகாணத்தில் இராலே மாநாட்டின் போது, பேரவையின் வரலாற்றில் முதல் முறையாகக் குறைவெண் வரம்புடன் (quorum) நேரடிப் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இது

**“ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப் படும்.”** (குறள் 131)

என்ற குறள் படி, நமது ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் பொறுப்பு ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்தது.

கேரொலைனா தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து நடைபெற்ற இந்த மாநாட்டில், மக்களின் பெரும் பங்கேற்பும் பேராதரவுடனும் நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. இளைஞர் குறும்படப் போட்டி, FiTEN –தொழில்முனைவர் மாநாடு, இலக்கிய மற்றும் கலை நிகழ்ச்சிகள் எனப் பல்வேறு தளங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கடந்த ஓர்ஆண்டில், பல்வேறு குழுக்கள் தங்கள் அயராத (tireless) உழைப்பின் மூலம் பேரவையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வித்திட்டுள்ளன. அவர்கள் அனைவருக்கும் என் இதயப்பூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக தமிழ் அவசரக்கால உதவி (Tamil ER), அன்புடைய நெஞ்சம், இலக்கியம், தகவல் தொடர்பு, தமிழிசை, தொழில்

நுட்பம்,அருவி மலர் போன்ற பல்வேறு குழுக்கள் இணைந்து செயலாற்றி, பேரவையை அடுத்த நிலைக்கு கொண்டு சென்றதும், சமூகத்திற்காக தன்னலமின்றி பணியாற்றியதும் பெருமைக்குரியது; பாராட்டத்தக்கது. அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றி!

மேலும் தகவல் தொடர்புக் குழு உருவாக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு இடையிலான தகவல்களைத் தெளிவாகவும் விரைவாகவும் பரப்பும் பணி மேற்கொள்ளப்பட்டது. தமிழ் மேம்பாட்டுக் குழு வட அமெரிக்காவில் உள்ள அனைத்து தமிழ்ப் பள்ளிகளின் விபரங்களையும் ஒருங்கிணைத்து, ஒரு அடைவு (Directory) உருவாக்கும் பணியைத் தொடங்கியுள்ளது. மாணவர்களின் கல்விக்குத் துணையாக தமிழ் கல்லூரி கல்வி உதவித்தொகை நிதி (Scholarship Fund) உருவாக்கும் முயற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை முறையாக ஒரு வைப்பு நிதி (Endowment) வடிவத்தில் அமைத்து, எதிர்காலத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குத் தொடர்ந்து கல்வி உதவி வழங்கும் திட்டம் முன்னேற்றமடைந்து வருகிறது.

தலைவர், துணைத்தலைவர்கள், பொருளாளர், இணைப் பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவரின் சார்பிலும், உறுப்பினர் சங்கங்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்” (குறள் 619)

என்ற வரினின்று ஒற்றுமையுடனும் விடாமுயற்சியுடனும் செயல்பட்டு பேரவையை மேலும் வலுப்படுத்துவோம்!

அடுத்து, நாம் அனைவரும் எதிர்நோக்கும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் (FeTNA) 39-ஆம் ஆண்டுத் தமிழ் மாநாடு, நியூசெர்சி தமிழ்ப் பேரவையுடன் (NJTaP) இணைந்து நியூசெர்சியில் நடத்தப்பட உள்ளது. தமிழ்ச் சமூகத்தின் குடும்பங்கள், கலைஞர்கள், அறிஞர்கள், இளைஞர்கள் அனைவரும் ஒன்று கூடும் ஒரு பண்பாட்டு விழாவாக இது அமையும் என்பதில் ஐயமில்லை. இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்விற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்புடன்,

**முனைவர் கபிலன் வெள்ளையா,**

**செயலாளர்,**

**வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.**





# வாழ்த்து மடல்

அன்பிற்கினிய வடஅமெரிக்கத் தமிழ் உறவுகளே,

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் முப்பத்தி எட்டாவது பேரவைத் திருவிழா அமெரிக்காவின் அனைத்து மாகாணங்களிலும் வாழும் தமிழர்களின் பேராதரவோடு எழுச்சியுடன் நடைபெற்று பெருவெற்றி பெற்றிருக்கிறது. விழாவிற்காக இரவு பகல் பாராமல் உழைத்த அனைத்து தன்னார்வலர்களுக்கும் அருவி மலர்குழு சார்பாக மனமார்ந்த வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த ஆண்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவையின் செயற்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அருவி மலர்குழு நான்கு இதழ்களை வெற்றிகரமாக வெளியிட்டு தற்போது இரண்டாம் ஆண்டில் பயணிக்கிறது. இந்த ஆண்டில் முதல் இதழான இலையுதிர் மலரை உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பதில் பெருமிதம் கொள்கிறது.

மாணவர்கள் மிக நீண்ட கோடை விடுமுறையில் தாய்த்தமிழ் நாட்டு பயணம், நண்பர்களுடன் சுற்றுலா என்று கொண்டாடிக் களித்துவிட்டு மீண்டும் பள்ளிக்கும், கல்லூரிக்கும் செல்லத் தொடங்கி இருக்கின்றனர். மாணவ கண்மணிகள் அனைவருக்கும் வாழ்த்துகள்.புலம்பெயர்ந்த தமிழர்கள் அமெரிக்காவில் இந்த இலையுதிர் காலத்தில் பசுமையாக இருந்த மரங்கள் எல்லாம் நிறம் மாறும் வண்ணக் காட்சியை கண்டு களித்துக் கொண்டிருக்கும் இந்த காலாண்டில் நம்முடைய தாய்த் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மாபெரும் மாற்றத்தையும் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது. மதராஸ் மாகாணமாக இருந்தது இன்றைக்கு தமிழ்நாடு என்று பெயர் பெற்றதற்கு அடிப்படையாக இருந்தது இந்த காலாண்டில் ஏற்பட்ட மாபெரும் சட்ட நிகழ்வு தான்.

1956 –ஆம் ஆண்டு வரை தென்னிந்தியாவில் இன்றைய தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களின் பல பகுதிகள் ஒருங்கிணைந்த மதராஸ் பிரசிடென்சியாக இருந்தது.

1956-ஆம் ஆண்டு நவம்பர் 01-ஆம் நாள் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தின் அடிப்படையில் மதராஸ் பிரசிடென்சியில் இருந்த சில பகுதிகள் நீக்கப்பட்டு மதராஸ் மாநிலமாக உருவெடுத்தது. மதராஸ் மாநிலம் என்பதை தமிழ்நாடு என்று அறிவிக்க வேண்டுமென எத்தனையோ மண்ணுரிமை போராளிகள் போராடியதன் விளைவாக இதற்கான தீர்மானம் ஜூலை 18-ஆம் நாள் 1968-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. பிறகு ஜனவரி 14-ஆம் நாள் 1969-வது வருடம் மதராஸ் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது என்பதுதான் வரலாறு. நம்முடைய மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கு அடிப்படையாக இருந்தது 1956-ஆம் ஆண்டு நவம்பர் 01-ஆம் நாள் மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற சட்ட நிகழ்வு தான் என்பதை இந்த காலாண்டில் எப்பொழுதும் நாம் நினைவில் கொள்வோம்.

அதேபோல நம்முடைய தொப்புள்கொடி உறவுகளான ஈழத் தமிழர்கள் தங்களுக்கென்று தன்னாட்சி அதிகாரம் வேண்டும் என்ற போராட்டத்தில் உயிரிழந்த தியாகிகளை போற்றும் மாவீரர் நாளும் இந்த காலாண்டில்தான் வருகிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆரோக்கியமான சமூகமானது அனைவரின் கூட்டுழைப்பால் தான் சாத்தியப்படுமே அன்றி வேறு அல்ல. எனவே இப்படி சாதி,மத பேதங்கள் கடந்து ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நன்றி பாராட்டி நன்றி நவிலும் இந்த காலண்டில் அதே நட்புறவுடன் செயல்பட்டு புலம்பெயர்ந்த தமிழர்களாம் நாம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவோம்.

இலையுதிர் மலருக்கு படைப்புகளை தந்த அனைத்து படைப்பாளிகளுக்கும், அட்டைப்பட ஓவியங்களைத் தந்த நம்ம ஊர் ஓவியர்களுக்கும், குறிப்பாக மருத்துவம் மற்றும் அறிவியல் சார்ந்த படைப்புகளைத் தந்த படைப்பாளிகளுக்கும் அருவி இதழின் சார்பாக வாழ்த்துகளையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம், அருவி குறித்த பின்னூட்டங்களை aru-vimalar@fetna.org என்ற மின்னஞ்சல் முகவரியில் பகிர்ந்து கொள்ளுங்கள்.


**திருமலைஞானம் சிவஞானம்**

**தமிழ்ச் சங்கம் மிச்சிகன், ரோசெஸ்டர் ஹில்ஸ், மிச்சிகன்**






# வரலாற்று வெற்றியில் இணைந்த கரங்களுக்கு...

## பேரவை 2025 மாநாட்டின் நெஞ்சார்ந்த நன்றி அறிக்கை!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே, அனைவருக்கும் வணக்கம்!

கடல் கடந்து வாழ்ந்தாலும் மொழி, பண்பாடு மற்றும் உணர்வால் நாம் அனைவரும் ஒரே குடும்பம் என்பதை மீண்டும் ஒருமுறை உலகிற்கு உரக்கச் சொல்லியிருக்கிறது நமது வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 38–ஆவது தமிழ் மாநாடு. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு, வெறும் மாநாடாக மட்டுமல்லாமல், ஒரு மாபெரும் தமிழ்க் கலாச்சாரத் திருவிழாவாக, இனிதே வெற்றிகரமாக நடந்தேறியது என்பதை








உங்களுடன் பகிர்வதில் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறோம். அமெரிக்கா மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 3000-க்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள், சிறப்பு விருந்தினர்கள், அறிஞர் பெருமக்கள், மற்றும் கலைஞர்கள் இந்த பிரம்மாண்டமான தமிழ்ச் சங்கமத்தில் கலந்துகொண்டு, தம்முடைய ஒற்றுமையின் வலிமையை வெளிப் படுத்தினர்.

இந்த வெற்றியைக் கொண்டாடும் இவ்வேளையில், இதன் பின்னணியில் இருந்த ஒவ்வொருவரின் உழைப்பிற்கும், அர்ப்பணிப்பிற்கும் எங்களது சிரம் தாழ்ந்த நன்றிகளைக் காணிக்கை யாக்குகிறோம். இந்த மாபெரும் கனவை நனவாக்கும் பயணத்தில், நாங்கள் எண்ணற்ற சவால்களையும்,




சிரமங்களையும் சந்தித்தோம். மாநாட்டிற்கான இடத்தை இறுதி செய்வதில் தொடங்கி, அனைத்து அரங்குகள் மற்றும் உணவு மையங்கள் ஒரே கூரையின் கீழ் அமைய வேண்டும் என்ற எங்கள் நோக்கத்தை நிறைவேற்ற பல இரவுகளின் உறக்கத்தையும், பல மைல் பயணங்களையும் அர்ப்பணிக்க வேண்டியிருந்தது. ஆனால், நம் தமிழ்ச் சமூகத்தின் ஒன்றுபட்ட சக்தியால், அத்தனை தடை களையும் நாம் படிக்கட்டுகளாக மாற்றி, இந்த இமாலய வெற்றியை அடைந்துள்ளோம்.

## தலைமையின் வழிகாட்டுதலும், தன்னார்வலர்களின் அர்ப்பணிப்பும்:

இந்த மாபெரும் முயற்சிக்கு ஆணிவேராகவும், அச்சாணியாகவும் விளங்கியவர் நமது பேரவையின் தலைவர் திரு. விஜய் மணிவேல் அவர்கள். அவரது தொலைநோக்குப் பார்வை, சரியான நேரத்தில் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் இடைவிடாத ஊக்கம் இல்லையென்றால், இந்த வெற்றி இவ்வளவு பிரம்மாண்டமாக சாத்தியப்பட்டிருக்காது.



மேலும், இந்த மாநாட்டின் இதயமாகவும், ஆன்மாவாகவும் திகழ்ந்தவர்கள் நமது தன்னார்வலர்களே. 31-க்கும் மேற்பட்ட தன்னார்வக் குழுக்களில், உள்ளூர் தமிழ் சங்கங்களில் மற்றும் அமெரிக்கா முழுவதிலுமிருந்து ஒன்றிணைந்த தன்னார்வலர்கள் தங்கள் நேரத்தையும்,

உழைப்பையும் தாண்டி, இதயப்பூர்வமான அன்பையும் சேவையாக வழங்கினர். உங்கள் தன்னலமற்ற அர்ப்பணிப்பும், அயராத உழைப்புமே இந்த மாநாட்டின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தது. உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் சிறப்பு நன்றிகள்.

### புரவலர்களின் பெருந்தன்மையும், பங்களித்த அனைத்து நல்லுள்ளங்களும்:

ஒரு நிகழ்வின் பிரம்மாண்டம், அதன் பின்னால் இருக்கும் ஆதரவின் வலிமையைப் பொறுத்தது. அந்த வகையில், இந்த மாநாட்டிற்கு மிகப்பெரிய அளவில் நிதி உதவி அளித்து, எங்களின் கனவை வானுயர உயர்த்திய அனைத்துப் புரவலர்கள், வணிகக்கொடையாளர்கள், மற்றும் கொடையாளர்கள் அனைவருக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழின் மீதும், தமிழ்ச் சமூகத்தின் மீதும் நீங்கள் வைத்திருக்கும் பற்றை உங்கள் பெருந்தன்மை பறைசாற்றியது. முந்தைய ஆண்டு மாநாடுகளின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் குழு உறுப்பினர்களின் அனுபவமும், வழிகாட்டுதலும், இருளில் வழிகாட்டும் கலங்கரை விளக்காக எங்களுக்குப் பெரிதும் உதவியது. அவர்களுக்கும் எமது நன்றிகள். இறுதியாக, பேரவைச் செயற்குழுவிற்கும், கேரொலைனா தமிழ்ச்சங்க (Tamil Sangam of Carolina) செயற்குழுவிற்கும் உங்களின் தொடர்ச்சியான ஆதரவிற்கும், நம்பிக்கைக்கும் எங்கள் சிரம் தாழ்ந்த நன்றிகள்.

இந்த வெற்றி ஒரு தனி நபரின் வெற்றியல்ல; இது ஒரு சமூகத்தின் கூட்டு வெற்றி. இந்த வெற்றி ஒரு முடிவல்ல; இது ஒரு புதிய தொடக்கம். நாம் அனைவரும் இணைந்து ஏந்திச் செல்லும் இந்த தமிழ்ப் பந்தம், அடுத்த தலைமுறைக்கும் ஒளி காட்டட்டும். இந்த மாநாடு விதைத்த ஒற்றுமையும், உற்சாகமும் வட அமெரிக்கத் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்குப் பேருதவியாக அமையும் என்று உறுதியாக நம்புகிறோம்.

**பங்களித்த மற்றும் பங்கேற்ற உங்கள் அனைவருக்கும்**
**மீண்டும் ஒருமுறை எமது நெஞ்சார்ந்த நன்றி!**

நன்றியுடன்,

**பேரவை விழா 2025 ஒருங்கிணைப்பாளர்கள்,**

## மீனா இளஞ்செயன் & பாரதி முருகேசன்





# கண்ணுக்கு எட்டா காதல்!



மலர்க்குழலி நடராசன்
மினசோட்டா

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை
நீல நிற வானம் பறந்திருக்க
கைக் கெட்டிய தூரம் வரை
வெண் நிற கடலலைகள் ஆர்ப்பரிக்க
பகலுக்கு எட்டிய தூரம் முடிய
செம்மை நிற சூரியன் மறைய
இரவுக்கு எட்டிய தூர விளிம்பில்
வெள்ளி நிற வெண்ணிலா ஒளிற
எண்ணத்திற்கு எட்டிய தூரத்தில் அவர்!
உள்ளத்திற்கு எட்டிய தூரத்தில் அவள்!
கண் காணாத தூரத்தில் தலைவனும்
கைக்கு எட்டாத தூரத்தில் தலைவியும்
இருப்பதை அறியாத இந்த
வானமும் நிலவும் காற்றும் கடலும்
பகலும் இரவும் காதல் புரிவது
மட்டும் நியாயமா?



# சிகாகோ தமிழ்ச் சங்கம்

**கவின்மிகு சூலை! தமிழ்மிகு சூலை!**

சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் 2025ஆம் கோடைகாலக் காலாண்டு நிகழ்ச்சிகள் பல்வேறு வகையில் சிறப்பாக நடைபெற்றன. சிகாகோ பகுதியில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்டோர் நமது பேரவையின் தமிழ் விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். தமிழ் விழா நிகழ்ச்சிகளின் கலை, இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றதுடன் பரிசுகளையும் பெற்றனர். அந்த வகையில் கோடைக் காலாண்டின் துவக்கம் வெற்றியுடன் துவங்கியது.

அன்னைத் தமிழ்நாட்டில் இருந்து அமெரிக்க மண்ணிற்கு வருகை தந்த அறிவாளர்களாம் பேராசிரியர் திருமிகு. சுப. வீரபாண்டியன், புலவர் திருமிகு. செந்தலை கவுதமன் கலந்து கொண்ட சிறப்பு அறிவரங்கம் சூலை மாதம் நடைபெற்றது. இந்த விழாவில் சமூக வாழ்வியலைத் தமது நகைச்சுவையால் உலகிற்கு எடுத்துச் சென்று, மக்கள் மனதினைக் கவர்ந்து வரும் ”பரிதாபங்கள்” வலையொலியின் திருமிகு. சுதாகர், திருமிகு. கோபி பங்கேற்றனர். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்வில், அறிவினை மேன்மை கொள்ளும் பொருண்மையின் கீழ், "குடிசெய்வார்க்கில்லை பருவம்" என்ற தலைப்பில் பேராசிரியர் சுப. வீர பாண்டியன், "பாவேந்தர் காட்டிய வழி" என்ற தலைப்பில் புலவர் செந்தலை கவுதமன் ஆகியோரது உரையையும் கேட்டு மகிழ்ந்தனர். ’அமெரிக்கப் பரிதாபங்கள்’ என்ற தலைப்பில், அமெரிக்க நாட்டிற்கு வருவதற்கான ஏற்பாடுகளில் இடம் பெறும் இடர்கள், அதனைத் தாண்டி வரும் மகிழ்ச்சிப் பெருக்கு, அமெரிக்க சூழல் ஆகியவற்றை, நயம் பெறும் நாடகமாக அன்பு நண்பர்கள் கோபி, சுதாகர் ஆகிய இருவரும் மேடையில் நாடகமாக அரங்கேற்றினர்.

’தமிழ் நம் உயிர்’ என்று 1969 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் சிகாகோ தமிழ்ச் சங்கம், இளையோர்களைக் கவரும் வகையில் புலம் பெயர் மண்ணில் விழிப்புணர்வு, தமிழுணர்வு ஊட்டும் வகையில் "எனக்கு எதற்கு தமிழ்" என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினர் திருமிகு. முத்துக்குமரன் பங்கேற்ற சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. வாரத்தின் இடை நாள் மாலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சிகாகோ தமிழர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

**ஆகத்து – உள்ளத்தின் உவகை!**

சிகாகோ தமிழ்ச் சங்கம் சார்பாக ஆகத்து மாதம் விருந்துலா (பிக்னிக்) நிகழ்ச்சி நடைபெற்றது. இருநூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட அந்த நாள் ஒரு சாதாரண சனிக்கிழமை அல்ல, ஓர் இனிய நினைவாக மாறியது. காலை நேரத்தில் அனைவரும் சந்தித்த அந்தத் தருணம், பழைய நினைவுகளை மீட்டும், புதிய நட்புகளை உருவாக்கும் ஒரு அருமையான தொடக்கமாக இருந்தது. பழச்சாறு, பழவகைகள் - இவை யாவும் சிரிப்புகளால், மேலும்





சுவையாக மாறின. நேரடி தோசை, பரோட்டா, மாலை தேநீர் - இவை மட்டும் அல்ல, உரையாடல்களும், சிரிப்புகளும் அந்த உணவுக்கு ஒரு தனிச்சுவை சேர்த்தன. நடன நிகழ்ச்சியில் சிலர் தங்கள் அசைவால் அனைவரையும் ஆச்சரியப்படுத்த, சிலர் கைதட்டலால் உற்சாகம் அளித்தனர். அந்த ஒத்துழைப்பு, அந்த உறவுப் பிணைப்பு - அதுவே நம் சமூகத்தின் அழகு என உவகை கொண்டாட்டம் நடைபெற்றது.

**உடலினை உறுதி செய்!**

2025ஆம் ஆண்டு கோடைப் பருவத்தை, உடலையும் உள்ளத்தையும் புதிப்பிக்கின்ற வாய்ப்பாக அனைவரும் பெறவேண்டுமெனும் நோக்கில், சிகாகோ தமிழ்ச் சங்கம் ஒரு மெய்நிகர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. நாள் ஒரு மைல் எனும் இலக்கில், நூறு நாள்கள் நூறு மைல்கள் கடப்போமென்பது, இந்நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களுக்கான இலக்காக விதைக்கப்பட்டது. இயற்கையை ரசித்தபடி நடப்போர், இசையைக் கேட்டபடி ஓடுவோரென அனைவரும் பங்கேற்கும் வகையில் இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டது. மே மாதம் முதல் நாள் துவங்கி ஆகத்து மாதம் ஒன்பதாம் நாள் வரையிலும் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

சிகாகோ பெருநகர், மேலும் அமெரிக்காவின் பிற மாகாணங்களில் வசிக்கும் இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தனிநபர் பங்கேற்பு என்பதை தாண்டி குடும்பமாகவும் பலர் இணைந்தனர். இவர்கள் அனைவரும் தாங்கள் கடக்கின்ற இலக்கினை, செயலி வழியாகப் பதிவு செய்தனர். இவ்விழாவின் ஒருங்கிணைப்புக் குழுவினர், நாள்தோறும் செல்லவேண்டிய தொலைவினை முன்கூட்டியே நெறிப்படுத்திப் பதிவு செய்தனர். நாற்பதுக்கும் மேற்பட்டோர் இருநூறு மைல் தொலைவினைக் கடந்தது பதிவானது. சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் புதிய முயற்சியாக இந்த ஆண்டு துவங்கப்பெற்ற இந்நிகழ்ச்சிக்கு பெரும் ஆதரவும் பங்கேற்பும் பாராட்டுகளும் கிடைத்தது.

**கல்வியே நம் செல்வம்!**

அனைவரும் கற்போம், அறிவு என்பது பொதுவுடைமை என்ற தமிழர்களின் கோட்பாட்டினை எதிரொலிக்கும் வகையில் கல்லூரி செல்லும் இளம் மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஆகத்து மாதம் நடைபெற்றது. இந்த பயிற்சிப் பட்டறையில் நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் சார்பாக கல்லூரி செல்ல உள்ள மேல்நிலை வகுப்பை மாணவர்களுக்கான முதல் நிகழ்ச்சி இது என்பது குறிப்பிடத்தக்கது.

**எங்கும் தமிழர்! எங்கும் தமிழர் கலை!**

சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் மரபு கலை குழுவினர்களாம் சிலம்பம், பறை குழுவினர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகின்றனர். அந்த வகையில், இந்தியத் தூதரகம் சார்பாக நடைபெற்ற நிகழ்விலும் சிகாகோ பெருநகர்ப்பகுதி பப்பெல்லோ குரோவ் (*Buffalo grove*) நகரில் நடைபெற்ற பொது விழாவில் பங்கேற்றனர். விழாவின் கலை அணிவகுப்பில் தமிழரின் மரபு அடையாளமான பறையை இசைத்தனர். உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வாழ்கின்ற அனைவருக்கும், பறை இசையை அறிமுகப்படுத்தும் வாய்ப்பினை இந்த நிகழ்வு பெற்றுத் தந்தது. துள்ளல் இசையைக் கேட்ட அனைவரும் நம் குழுவினரைப் பாராட்டினர். பொன்பறை, சிலம்பம் குழுவினருக்கு வாழ்த்துகள்!

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" — என்று புறநானூறு கூறுவது போல், எந்த ஊரிலிருந்தாலும், நாம் அனைவரும் ஒரே குடும்பம் என்பதைக் காட்டும் இந்த வரிகள், சிகாகோ பெருநகரில் வாழும் தமிழர்கள், தாங்களும் தங்கள் சுற்றமும் சூழப் பங்கேற்கும் பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாகத் தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

# கிரேட்டர் ஹூஸ்டன் தமிழ்ச் சங்கம்

கிரேட்டர் ஹூஸ்டன் தமிழ்ப் பள்ளிகள் மற்றும் சங்கத்தின் நிகழ்வுகளை இங்கு பதிவு செய்வதில் சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். சங்கத்திலும், பள்ளிகளிலும் நடக்கும் நிகழ்வுகளை பதிவுசெய்ய ஒரு அருமையான தளத்தை நம் தமிழ் சமுதாயத்திற்கு அளித்த வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைக்கு கிரேட்டர் ஹூஸ்டன் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டு முழுவதும் அயராது உழைத்த மாணவ மற்றும் மாணவிகளுக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் நமது கிரேட்டர் ஹூஸ்டன் தமிழ்ப் பள்ளிகளின் (பியர்லேண்ட் தமிழ்ப்பள்ளி, சுகர்லேண்ட் தமிழ்ப்பள்ளி, வூட்லேண்ட் தமிழ்ப்பள்ளி, மேற்கு ஹூஸ்டன் தமிழ்ப்பள்ளி, கேட்டி தமிழ்ப்பள்ளி, மேற்கு கேட்டி தமிழ்ப்பள்ளி. மற்றும் சைப்ரஸ் தமிழ்ப்பள்ளி) சார்பாக ஏறக்குறைய 600க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு. பட்டமளிப்பு விழா 2025, மே மாதம் 10-ம் நாள், சனிக்கிழமை அன்று நடைப்பெற்றது.

இந்த பட்டமளிப்பு விழா, அவர்கள் பெற்ற கல்விக்கு ஒரு அங்கீகாரமும், அவர்களை மேற்கொண்டு பயிலவேண்டும் என்ற ஆர்வத்தையும் தூண்டுகிறது. இந்த பட்டமளிப்பு விழாவினை சிறப்பாக அமைத்து தந்த கிரேட்டர் ஹூஸ்டன் தமிழ்ப்பள்ளியின் மற்றும் சங்கத்தினுடைய தலைவி. திருமதி. யமுனா ராணி ரவிக்குமார் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த விழா மேலும் சிறப்படைய உறுதுணையாக இருந்த அனைத்து பள்ளி முதல்வர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மற்றும், பெற்றோர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக முனைவர். திருமதி. விஜயலட்சுமி தங்கவேல், தமிழ் இருக்கை, ஹூஸ்டன் பல்கலைக்கழகத்திலிருந்து கலந்துகொண்டு மாணவர் களுக்கு தமிழ் இருக்கை பற்றியும், வரும் காலத்தில் தமிழ் கற்கும் வழிமுறைகளையும் தெளிவாக எடுத்துரைத் தார். அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக. மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோடைக்காலத்தில் ஹூஸ்டன் தமிழ் மக்களை நகைச்சுவை என்னும் மழையில் நனைய வைக்க ஜூலை மாதம் 20-ம் தேதி அன்று நகைச்சுவை பட்டிமன்ற புகழ் திரு. ஈரோடு மகேஷ் அவர்களின் தலைமையில் ஒரு மெகா பட்டிமன்றம் அரங்கேறியது. இதனுடைய தலைப்பு என்னவென்றால் இன்றைய காலகட்டத்தில் குழந்தைகளை சிறப்பாக கையாள தேவை கண்டிப்பான பெற்றோரா? அல்லது கலகலப்பான பெற்றோரா?. திரு. ஈரோடு மகேஷ் அவர்களோடு நமது ஹூஸ்டன் நகரை சேர்ந்த தமிழ்மக்கள் எட்டுப்பேர் (திரு ஆதித்யா அய்யப்பன், திருமதி. ராமா தேவி, திருமதி. நிர்மலா கோபாலன், திரு. கார்த்திக், திரு. ராதாகிருஷ்ணன், திரு. ராஜ் சேதுராமன், திருமதி. ராதிகா பாரி மற்றும் திரு சதிஷ்) கலந்துகொண்டு மிகக் குறுகிய காலத்தில் பயிற்சி எடுத்து அருமையாகப் பேசிய அவர்களை சங்கம் மனமார்ந்து பாராட்டுகிறது. இவர்களுடைய பட்டிமன்ற வாதங்களை அருமையாக படமாக்கிய, திரு செந்தில் சுகர்லேண்ட் தமிழ்ப்பள்ளி, அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோடையில் பெற்றோர்களுக்கு மட்டுமல்லாமல் மாணவர்களுக்கும் சில பயிற்சிகள் அளிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதி திரு. நீலகந்தா பானு அவர்கள் இணையத்தின் வாயிலாக, கணித பாடத்தில் எவ்வளவு வேகமாக விடை அளிக்க முடியும், அதற்கான பயிற்சி என்ன?, எப்படி எல்லாம் அதனுடைய பயிற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்?. என்ற பல வினாக்களுக்கு ஏறக்குறைய இரண்டு மணி நேரத்துக்கு மேல் பள்ளி குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தார். இதன்மூலம் ஹூஸ்டன் பெருநகர பள்ளி குழந்தைகளுக்கு கணித பாடத்தில் ஆர்வமும் அதனை எவ்வாறு கையாள வேண்டும் என்ற முறையும் கற்றுக்கொடுக்கப்பட்டது. சங்கத்தின் சார்பாக இதில் கலந்து கொண்ட மாணவர் களுக்கும், அதனை ஊக்குவித்த பெற்றோர்களுக்கும் மற்றும் நீலகந்த பானு அவர்களுக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதன்மூலம் சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும், சங்க செயற்குழு உறுப்பினர்களுக்கும், சங்க ஆலோசனைக் குழுவில் இருக்கும் உறுப்பினர்களுக்கும் மற்றும் சங்கத்திற்கு தன்னார்வ தொண்டை தன்னல மற்று அளித்து வரும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் சங்கத்தின் சார்பாக பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு.

கிரேட்டர் ஹூஸ்டன் தமிழ்ச் சங்க நிருவாகிகள்.








ஹூஸ்டன் பெருநகரத் தமி
Houston, Texas


ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச் சங்கம்
Greater Houston Tamil Sangam
GREATER
HOUSTON
TAMIL


ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்
ஹூஸ்டன், டெக்சாஸ்.


BOSS


ஹூஸ்டன், டெக்சாஸ்.



# தமிழர் பண்பாட்டில் சமத்துவம்




**நளினி சுந்தரராஜன்**
**விஸ்கான்சின், வட அமெரிக்கா**


ஒரு இனத்தின் பண்பாடென்பது மக்கள் வாழ்வியல் முறை. தமிழர் பண்பாடு சங்க காலத்தில் அகம், புறம் எனஇருபிரிவுகளாகவகுக்கப்பட்டிருந்தன. அகம் என்பது அன்பு, காதல், இல்லறவியல் போன்ற அகம் சார்ந்த அன்பின் ஐந்திணை ஒழுக்கங்களாகவும். புறம் என்பது அறம், புகழ், வீரம், மானம், விருந்தோம்பல், ஈகை, பொதுநலம் போன்ற புறத்திணை ஒழுக்கங்களாகவும் இலக்கியங்களில் வடிக்கப்பட்டன. சமத்துவமென்பது பிறப்பு, குலம், தோற்றம், செய்யும் தொழில் வைத்து உயர்வு தாழ்வு பாராட்டாது எல்லோரையும் சமமாகக் கருதும் மனித நேயமாகும். தமிழர் பண்பாட்டில் சமத்துவ சிறப்பு மிக்கது விருந்தோம்பல்.

**பண்டைக்காலத்தில் விருந்தோம்பல்**

“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்வருந்து வானத் தவர்க்கு”

இந்தக் குறளுக்கு மிகச் சிறந்த உதாரணம் பண்டைக் காலத்தில் இருந்த அன்னச் சத்திரங்கள். வாகனப் போக்குவரத்து இல்லாத காலத்தில் மக்கள் ஊர்களுக்கு கால் நடையாகவோ, வண்டி கட்டிக் கொண்டோ செல்ல வேண்டும். வழியில் இளைப்பாற நல்ல மனம் படைத்த செல்வந்தர்கள் உணவுக்கும், உறைவிடத்திற்கும் சத்திரங்கள் கட்டி வைத்திருப்பார்கள். பேதமின்றி அனைத்து வழிப்போக்கர்களுக்கும் உணவு வழங்கப்பட்டது. எந்நேரமும் சமையல் அறையில் அக்கினி கனன்று கொண்டே இருக்கும். உண்டு, உறங்கி ஓய்வெடுத்த பின் மக்கள் தங்கள் பயணத்தைத் தொடர்வார்கள். வழிப்போக்கர்களை விருந்தினர்களாக உபசரித்த பண்பாடு நம் தமிழினத்தினுடையது.

**திண்ணை வீடுகள்**

நகர்ப்புறங்களில் திண்ணை வீடுகள் அரிதாகிப் போனாலும் கிராமங்களில் இன்னமும் திண்ணை வீடுகள் உள்ளன. தெருவில் போவோர் வருவோரிடம் கதை அளப்பது, பாக்கை இடித்து கொண்டே வயதானவர்கள் பழங்கதை பேசுவது, குழந்தைகள் விளையாட என திண்ணைக்கு பல பயன்கள் இருந்தாலும், பழங்காலத்தில் திண்ணை என்பது வழிப்போக்கர்கள் அமர்ந்து தங்களை ஆசுவாசம் செய்து கொள்ளவும், வீட்டில் உள்ளோர் அவர்களுக்கு உணவும், நீரும், உறங்கப் பாயும் கொடுத்து சமத்துவ விருந்தோம்பலுக்கு இடமளிப்பதாய் இருந்தது.

**விழாக்களும் சமபந்தி விருந்துகளும்**

மக்கள் வாழ்வில் இன்பமும் மலர்ச்சியும், புத்துணர்ச்சியும் ஊட்டுவன விழாக்கள். உயர்வு தாழ்வின்றி அனைவரையும் ஒன்றுபடுத்தி மகிழ்ச்சியில் திளைக்க வைப்பதே விழாக்களின் முக்கிய நோக்கமாகும். கார்த்திகை விழா, தை நீராட்டு, இளவேனில் விழா, இந்திர விழா என பல்வேறு விழாக்கள் பற்றி சங்க



இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. விழாக்கள் என்றாலே விருந்து அங்கே மையம். ஊர் கூடித் தேர் இழுத்து, வேண்டுதல்கள் முடித்து, வாண வேடிக்கை கண்டு பின்பு மக்கள் அனைவரும் ஒன்றாய் பந்தியில் அமர்ந்து பெருங் கலயங்களில் சமைக்கப்பட்ட உணவை கூடி உண்பது முக்கிய நிகழ்வாகும். இன்றும் பல ஆலயங்களில் அன்னதானங்கள் செய்யப்படுகின்றன. சமபந்தி விருந்து மட்டுமே தனியாக சமூக நல்லிணக்கத்திற்கும், சமத்துவம் பறை சாற்றவும், தமிழர் பண்பாடு நிலை நிறுத்தவும் ஆங்காங்கே நடைபெற்று வருவது போற்றப்பட வேண்டிய ஒன்று.



### சத்துணவு திட்டம்

1982 ஆம் ஆண்டு தமிழக அரசு கொண்டு வந்த மதிய உணவு திட்டத்தின் நோக்கம்,

- பொருளாதாரத்தில் நலிவடைந்த குழந்தைகளுக்கு சத்தான உணவு கிடைத்திட வகை செய்தல்.
- ஊட்டச்சத்து குறைபாடுள்ள பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்குவதன் மூலம் கல்வித்தரத்தை மேம்படுத்துதல்.
- பள்ளி பயிலும் மாணவ, மாணவியர் கல்வி இடைநிறுத்தம் செய்வதை தடுத்திடுதல்.

இந்த நோக்கம் தமிழர் விருந்தோம்பல் பண்பாட்டின் இன்னொரு பரிமாண நீட்சியாகவே தோன்றுகிறது. பள்ளிக்கு வரும் குழந்தைகளை விருந்தினர் போல் பாவித்து வயிறார உணவளித்து பின்பு கல்வி பயிற்றுவிக்கும் நல்லெண்ணம் எத்தனை சிறப்பு. இந்தத் திட்டத்தினை தற்பொழுது தமிழக அரசு காலை உணவு வழங்கும் திட்டமாகவும் நீட்டித்திருப்பது பாராட்டப்பட வேண்டியது.

### அயலகத்தில் விருந்தோம்பல்

உற்றமும் சுற்றமும் தாயகத்தில் இருப்பதால், அயல் நாட்டில் சந்திக்கும் தமிழ் மக்கள் நட்பும் சுற்றமுமாய் மாறி விடுகிறார்கள். மதம், இனம் கடந்து, தலை வாழை விருந்து படைத்து, விருந்தோம்பல் பண்பு விடாது பின்பற்றும் பாரம்பரியம் தொடர்கிறார்கள்.

### முடிவுரை

விருந்தோம்பல் என்பது நிறம், இனம், மதம் தாண்டி தாராள மனத்துடன் உயிர்களுக்கு ஆதரவளிக்கும் குணத்தையும், காருண்யத்தையும் குறிப்பது. தமிழர் என்றால் விருந்தோம்பலும், விருந்தோம்பலில் சமத்துவம் என்பது தமிழரின் தனித்துவமாகும்.

## வாழ்த்துகள்

# அட்டைப்பட ஓவியங்கள் தந்த நம்ம ஊர் ஓவியர்கள்



முன்பக்க அட்டை படம்

**நந்தீஸ்வரி ஜெயராமன்**

ஹூஸ்டன், டெக்சாஸ்.




பின்பக்க அட்டை படம்

**ஹர்ஷன் வினோத்கண்ணன்**

சன் ப்ரேரி, WI




நாட்டின் தந்தை என அழைக்கப்படும் காந்தி, மற்றும் பிற இந்திய ஆண் சுதந்திரப் போராட்ட வீரர் களைப்பற்றி நாம் அனைவரும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பெண் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றி என்ன? ஜான்சி ராணிக்கு வெகு காலத்திற்கு முன்பே, ஆங்கிலேய காலனியவாதிகளுக்கு எதிராகப் போராடிய முதல் ராணி, தைரியமான மற்றும் ஆக்ரோஷமான ராணியைப் பற்றி இன்று நான் பேச வந்துள்ளேன். அவரது பெயர் ராணி வேலு நாச்சியார், வீரமங்கை என்றும் அழைக்கப்படுகிறார். ராணி பிறந்த ஜனவரி 3, 1730-இல் இருந்து தொடங்குவோம். இவர் இராமநாதபுரம் சீமையின் மன்னர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி மற்றும் ராணி சக்கந்திமுத்தாள் ஆகியோருக்கு ஒரே மகளாகப் பிறந்தார். அவரது தந்தையின் வழிகாட்டுதலின் கீழ், சிலம்பம், வளரி, களரிப்பயிற்று, குதிரையேற்றம் மற்றும் வில்வித்தை போன்ற பல கலைகளில் அவர் பயிற்சி பெற்றார். அத்துடன், பிரஞ்சு, ஆங்கிலம் மற்றும் உருது போன்ற மொழிகளையும் அவர் அறிந்திருந்தார். சில ஆண்டுகள் கடந்தன, வேலு நாச்சியார் இப்போது ஒரு அழகான, புத்திசாலி மற்றும் துணிச்சலான பெண். இராமநாதபுரம் சீமையுடன் கூட்டணி வைக்க, 1746-இல் சிவகங்கை சீமையின் இளவரசன் முத்துவடுகநாத தேவரை மணந்தார். பின்னர் வெள்ளச்சி நாச்சியார் என்ற மகள் பிறந்தார். இப்போது எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தபோது, அப்படிப்பட்ட ஒரு அமைதியான தருணத்தை கெடுக்க என்ன நடக்க முடியும்? சரி, ஆங்கிலேயர்கள் வந்தார்கள். ஆங்கிலேய காலனியவாதிகள் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியை உருவாக்கி இந்தியாவுக்கு வந்தபோது எல்லாம் மெதுவாக மாறத் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் முதலில் இந்தியாவில் வர்த்தக நோக்கங்களுக்காக இந்த கம்பெனியை அமைத்தனர், ஆனால் மெதுவாக ஒரு படையை உருவாக்கினர், மேலும் இந்தியாவின் இராச்சியங்களுக்கு இடையேயான மோதல்களைப் பயன்படுத்திக் கொண்டனர். இறுதியில், பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஆற்காடு நவாப்புகளுடன் கூட்டணி வைத்து, மதுரை நாயக்கர் போன்ற இந்தியாவின் மற்ற பேரரசுகளையும் கைப்பற்றினர். மேலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த, தங்களுக்கு

கப்பம் செலுத்துமாறு இராச்சியங்களைக் கேட்டனர், ஆனால் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை இராச்சியங்கள் மறுத்தபோது குழப்பம் வெடித்தது. 1772-இல், சிவகங்கை சீமையின் மன்னர் காளையார் கோவிலில் உள்ள சிவன் கோவிலில் வழிபடச் சென்றபோது, ஜோசப் ஸ்மித் தலைமையிலான பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் திடீர் தாக்குதலில் வேலு நாச்சியாரின் அன்புக் கணவர் கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதலின் காரணமாக வேலு நாச்சியார் தனது குழந்தையுடன் சிவகங்கை சீமையை விட்டு வெளியேற வேண்டியிருந்தது, தனது நம்பிக்கைக்குரிய பெண் மெய்க்காப்பாளர்

உடையாள் உதவியுடன் திண்டுக்கல்லில் உள்ள விருப்பாச்சி எனும் ஊருக்கு தப்பிச் சென்றார், மேலும் 8 ஆண்டுகள் தலைமறைவாக வாழ வேண்டியிருந்தது. அவரது கோபத்திற்கு மேலும் எரிபொருள் சேர்ப்பதுபோல், ஆங்கிலேயர்கள் வேலு நாச்சியார் இருப்பிடம், அறிய உடையாளைப் பிடித்து சித்திரவதை செய்தார்கள், ஆனால் ஒரு விசுவாசமான காவலராக, உடையாள் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை என்பதை அவர் அறிந்தார். அதுதான் அவரது மனமுடைவின் உச்சக்கட்டம். அவர் உடனடியாக ஆங்கிலேயர்களிடம் பழிவாங்குவதாகவும், தனது அரியணையும் இராச்சியத்தையும் மீண்டும் பெறுவதாகவும் சபதம் செய்தார். நேரத்தை வீணடிக்காமல், அவர் ஒரு அனைத்து-பெண்கள் படையை உருவாக்கி, தனது தந்தையிடமிருந்து கற்றுக்கொண்ட பல்வேறு சண்டை நுட்பங்களில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தார். தனது விசுவாசமான மெய்க்காவலரின் நினைவாக இந்தப் படைக்கு உடையாள் என்று பெயரிட்டார். தனது படைக்குப் பயிற்சி அளித்த பிறகு, குயிலியைப் படையின் தளபதியாக்கினார், மேலும் ஹைதர் அலி (மைசூர் சுல்தான்) உதவியுடன், வேலு நாச்சியாரால் ஆயுதங்கள் மற்றும் 5000 வீரர்களைப் பெற முடிந்தது. அவர்கள் சண்டைக்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது, ஒரு சிறிய சிக்கல் ஏற்பட்டது: ஆங்கிலேயர்களைவிட தங்களிடம் குறைந்த வெடிமருந்துகளே இருந்ததை வேலு நாச்சியார் அறிந் தார். இதையெல்லாம் மனதில் கொண்டு, அவர்களின் வெடிபொருட்கள்

அனைத்தையும் எரித்து விடுவது என்று முடிவு செய்தனர், இதனால் ஆங்கிலேயர்களிடம் சண்டையிட குறைவான ஆயுதங்களே இருக்கும் என்று அவர்கள் உத்தி வகுத்தனர். 1780-இல் விஜயதசமி நாளில், வேலு நாச்சியாரின் படை சாதாரண கிராமத்துப் பெண்களாக வேடமிட்டு, சிவகங்கை கோட்டையில் உள்ள பிரிட்டிஷ் வெடிமருந்துகளை அணுகுவதற்காக ராஜராஜேஸ்வரி கோவிலுக்குச் சென்றது. குயிலியின்

படைகள் கோயிலுக்குள் சென்றார்கள். மேலும் வேலு நாச்சியாருடன் இணைந்து ஆங்கிலேயர்களைத் தாக்கத் தொடங்கினார். அவர்கள் சண்டையிட்டபோது, குயிலி தந்திரோபாயமாக உடையாள் படையை வெடிமருந்து கிடங்கின் பின்புறம் அழைத்துச் சென்றார். அனைத்து பிரிட்டிஷ் வெடிமருந்துகளையும் அகற்ற, அவர் மிகத் துணிச்சலான நடவடிக்கையை எடுத்தார்: அவர் ஒரு மனித வெடிகுண்டாக மாறினார். இரண்டாம் உலகப் போரில் ஜப்பானிய காமிகாசிகளைப் பற்றி அறியப்படுவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே, குயிலி அதை துணிச்சலாகச் செய்தார், இது தமிழர்களின் புத்திசாலித்தனத்தையும் வீரத்தையும் காட்டுகிறது. ஆம், அவர் நெய்யில் தன்னை மூழ்கடித்து, தீ மூட்டி, வெடிமருந்து கிடங்கிற்குள் சென்று அனைத்து பிரிட்டிஷ் வெடிமருந்து களையும் எரித்து அழித்தார், வரலாற்றின் முதல் மனித வெடிகுண்டாக மாறினார். பிரிட்டிஷ் படைக்கும் வேலு நாச்சியாருக்கும் இடையேயான சண்டை மிகவும் உக்கிரமாக இருந்தது, பலர் இறந்தனர், ஆனால் வேலு நாச்சியாரின் படை வலுவாக நின்றது. இறுதியில், வேலு நாச்சியாரின் உடையாள் படை பிரிட்டிஷ் படையை நசுக்கி, தனது இராச்சியத்தின் அரியணையை மீண்டும் பெற்றது. அதன்பின் வேலு நாச்சியார் 1796-இல் இறக்கும் வரை 10 ஆண்டுகள் ஆட்சி செய்தார். வேலு நாச்சியார் போன்ற பெண்கள் இளம் பெண்களுக்கு உத்வேகமாக இருக்கிறார்கள், இதுவே உண்மையான பெண்ணியம் ஆகும். இது வீரம், கடமை உணர்வு, சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படுதல், எதிரிகளுக்கு எதிராக நிற்றல் ஆகியவற்றை காட்டுகிறது. இன்றைய பெண்கள் வெவ்வேறு வகையான போராட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் எதிர்கொள்கிறார்கள். மேலும் உண்மையான பெண்ணியம் என்றால் என்ன என்பதை மக்களுக்கு நினைவூட்ட, இந்த அற்புதமான பெண்களை (வேலு நாச்சியார், குயிலி, உடையாள்) பார்க்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, அவர்களை மறந்துவிட்டோம், ஆனால் அவரது கதையை நாம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தால், அது எதிர்காலத் தலைமுறையினருக்கு உத்வேகம் அளிக்கும், மேலும் இளம் பெண்கள் ராணி வேலு நாச்சியாரைப் போல நாளைய வீரம் நிறைந்த தலைவர்களாக இருக்க உதவி அளிக்கும்.



**தியா கணேஷ்**

# ஒற்றைச் சருகாய்

ஒற்றைச் சருகாய் கிளை தனில் ஆடினாய்
இருக்கவா போகவா என்றே பாடினாய்...

போகாதே என்று சொல்ல வாயெடுத்தேன்
சொல்லி முடிக்கும் முன்னே விடுத்தாய்...

அதற்குள் என்ன அவசரம் என்றேன்
வேர்களில் தானே விழுகிறேன் என்றாய்...

பார்வையின் தூரத்தில்

இருக்கிறாய் போதும் என்றேன்
ஆனால் அங்கும் இருக்கவில்லை
காற்றுக்குதிரை ஏறிவிட்டாய்...

ஒரு கனம் என்னைச் சுற்றிச் சுழன்றாய்
மறுகனம் ஏனோ மாயமானாய்...

வருவாய் என நான் காத்தே கிடந்தேன்
சென்ற திசையை பார்த்தே இருந்தேன்...

தனிமை கொடிதென சொல்லிக் கேட்டதுண்டு
உண்மையில் நானாய் நடந்ததும் இல்லை...

அற்பப் பொருளை தேடி ஓடியே
இலையுதிர் காலத்து மரக்கிளை ஆனேன்...

உறவின் அறுமை அறிவது எது?
தனிமையின் கொடுமையில்
தோய்ந்திட்ட மனமது...

தமிழால் இணைந்தோம்! நன்றி!





காஞ்சனா பக்தவத்சலம்
பிட்ஸ்பர்க், பென்சில்வேனியா

# மில்வாக்கி மாநகர தமிழ் சங்கம்










மில்வாக்கி மாநகர தமிழ் சங்கம், ஜூலை 19 அன்று நிதி மேலாண்மை பற்றிய நிகழ்ச்சியை நடத்தியது. மோஹன், சிக்காகோ, விருந்தினராக கலந்து கொண்டு, நிதி மற்றும் முதலீடு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். முதலீடு பற்றிய சிக்கலான பல கருத்துக்களை அனைவருக்கும் புரியும் படி மிக எளிமையாக விளக்கமளித்தார். மேலும், அனைவரின் கேள்விகளுக்கு பொறுமையாக பதில் அளித்தார். 3 மணி நேரம் நடந்த இந்த நிகழ்ச்சி அன்னைவருக்கும் உபயோகமாக இருந்தது. மில்வாக்கி மாநகர தமிழ் சங்கம் ஒவ்வொரு வருடமும் 3 முறை 'அடாப்ட் தே ஹைவே' வாயிலாக தெருக்களை தூய்மை படுத்தும் பணியில் ஈடுபடுகிறது. இந்த வருடமும், ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட்-இல் தன்னார்வலர்களை வைத்து இப்பணி சிறப்பாக செய்யப்பட்டது.இளம் தன்னார்வலர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு முழு மனதுடன் பணியாற்றினர்.



# நாவிலே இனித்து உயிர் நாடியைப் பிடிக்கும்

***

சீனியே உன்னோடு சீவித்தல் அரிது.
பாரிலே அன்று பசித்துத் திரிந்தோம்
நாவிலே தேனாய் நவிற்றிடும் கனியாய்
ஏணியைப் போட்டு எம் உயிரணு தொட்டு
சீனிச் சுவையாய் அன்று சிம்மாசனம் போட்டாய்.

காலங்கள் போனது புதுக் கலாச்சாரம் மலர்ந்தது
காடு கரம்பைகள் கழனிகள் ஆனது.
வீடுகள் தோறும் விளைச்சல்கள் சேர்ந்தது.
விஞ்ஞானம் வளர்ந்தது – ஆனால்
விண்ட உன் சுவை இன்னும் விருந்துகள் தருவதால்
வில்லங்கம் தொடர்குதே.

தொட்ட உணவிலெல்லாம் எம்மைத் தொடருகிறாய்
தொடர் கதை எழுதுகிறாய் – நீ எம்மில்
தொடாத இடமில்லை
தொடுத்த துயர் கொஞ்சமில்லை.

சீ நீ வந்து சிலம்பாட சிந்தனைகள் குழம்பாக
பானைத் தண்ணி பருகியதாய் பகலிரவாய் நீர் கழிக்க
படுத்தும் இந்நோய் கொண்டு வந்தாய் – இது
உடல் பாவும் நோய் என்றறிவோம்.

குருதிக் குழாய்களை குத்தகைக்கு எடுக்கின்றாய்
கொழுப்பைக் குவியலிட்டு குழப்பத்தைத் தொடக்குகிறாய்
atherosclerosis என்பாய், அடைக்கும் என்பாய்,
நெஞ்சைப் பிடிக்க வைப்பாய், நினைத்தால் முடித்து வைப்பாய்.

மூளைக் குழாய்களை நீ முத்தமிடுவதனால்
வேலைக்காகாது எம்மை முடக்கிப் போடுகிறாய்.
காலைக் கடிக்கின்றாய் கழட்டவும் வைக்கின்றாய்
வேளை வர முன்னமே எம் வேலையை முடிகின்றாய்

கண்ணில் கண் வைக்கும் உன் கபடத் தனம் என்ன சொல்ல

புண்ணாக்கிப் போவதிலே பெருமை என்ன கண்டாயோ?

மண் தேடிப் போகும் மரணம் வருவதற்குள்

என்னோடு வந்திருந்து எந்நாளும் கொல்வதென்ன?

விழித்திரையில் இனிப்பு, படம் காட்டும்

விலையாகப் பார்வை வரம் போகும்.

வில்லையை நிறைக்க, cataract விரைவாய் வரப் பார்க்கும்

glaucoma வந்து குடியேற இடம் கேட்கும்.



சிவானி பத்மராஜா,

சின்சினாட்டி

நித்திரைக்கு விடாமல் புற்றரிப்பு காலோடு

குற்றமென்ன செய்தேனோ குடைச்சலுக்குக் குறைவில்லை

நரம்புத் தொகுதியிலே உன் நாட்டியத்தைத்

தொடர்வதனால்

எழும்பத் தலை சுற்று, ஏப்பம், மலச் சிக்கல், வயிற்றுளைவு, வாந்தி என்று

வந்த துயர் கொஞ்சமில்லை வாழ்க்கை என்று மிச்சமில்லை

வம்புக்கு இழுக்கும் நீ வாழ்வோடு வரும் தொடரே.

சீனி வடித்து சிறுநீரகம் களைக்க வைப்பாய்

- கழிவைப்

போ நீ என்று சொல்ல (dialysis) பெரும் machine னோடு குந்த வைப்பாய்

காணி வித்து கழிநீரகம் வாங்க வைப்பாய்.

ஆனி பல வருவதற்குள்

அடுத்த உலகம் அனுப்பி வைப்பாய்.

ஆணி பிடுங்கும் அந்தரத்து வாழ்க்கையிலே

பாவி நீ என்னைப் படுத்தும் பாடு என்ன?

என் காலிலே ஒரு எரிமலையை இறக்கி வைப்பாய்

எப்போதும் எரிய வைப்பாய் என்னை எங்கே விட்டு வைப்பாய்.

பாதைகளில் வரும் தொற்றுப்

பாவிகட்குத் துணை நிற்ப்பாய்.

படையெடுப்பில் பங்கேற்று

பரிசாக எமைக் கேட்பாய்

தொற்று நோயோடு உடல் தொட்ட நோய்க்கெல்லாம்

உற்ற துணையாகி ஊறு விளைவிக்கும்

புற்று நோயின் ஒரு புனைவு வடிவமே,

சற்று அசந்தாலும் சரிக்கத் தயங்காத

சூற்றின் குவியலே,குருதியில் வாழ்ந்து

குழாய்களை குலைத்து உடலோடு உயிர் குதறும்



குருதியின் glucose ஏ - உன்னை

விட்டுப் பிடித்ததற்கு

விலைகள் பல தந்து விட்டோம்

விட மாட்டோம் இனியும்,

விழித்து விட்டோம்

விலக்கி வைப்போம் - உன் வினைகளை

விளக்கி வைப்போம்.

மருந்தெடுப்போம்,

மனம் மாற்றி வைப்போம்

நிமிர்த்திடுவோம்.

நீரிழிவோடும் வாழ்வை

நீட்டி வைப்போம்



# நல்லதோர் வீணை



பிரபாவதி இராஜா

நிர்மலாவின் வீட்டின் பின்புறம்

தென்னை, வாழை, மாதுளை, பவளமல்லி என்று மரங்கள் பசுமையாகக் காட்சியளிக்கும். அதிகாலையில் குயிலின் இனிமையான கானம் மனதிற்கு

இதமான மகிழ்வைத் தரும். அப்படிப்பட்ட இயற்கையோடு இணைந்து வாழ்வை ரசிப்பவள் தான் நிர்மலா.

நிர்மலாவின் மகள் அனிதா, ஏழாம் வகுப்பு படிக்கிறாள். படிப்பிலும் விளையாட்டிலும் படு சுட்டி, அவளது பேச்சில் நக்கலும் நகைச்சுவையும் மிகுந்திருக்கும். தேசப்பற்று கலந்த சிந்தனையோடு வாழ்பவள்.

ஒரு நாள் காலையில் சமையல் அறைக்கு வந்தவள் அம்மாவைப் பார்த்ததும், "அம்மா கை சுடுது!" "அம்மா கை சுடுது!" என்று சொல்லிக் கொண்டே வாசல் பக்கம் பார்த்து ஓடினாள்,

நிர்மலா திடுக்கிட்டு, " என்னாச்சு அனிதா கை சுடுதா ஏன் என்ன பண்ணே? என்று அடுத்தடுத்து கேள்விகளை கேட்டுக்கொண்டே அனிதாவின் பின்பு ஓடினாள்.

அனிதாவைப் பிடித்து நிறுத்தி, "எங்கே கையைக் காட்டு" என்றாள், இரு கைகளையும் காட்டியவள், அம்மாவின் முகத்தைப் பார்த்து, "உன் சட்டையில, கையில எம்பிராய்டரி தீபம் இருக்கு பாரேன் அது சிவப்ப எரியுதுள்ள... அது உன் கையில சுட்டுடுமில்ல அதான் கை சுடுது!" என்று சொன்னேன் என்று கூறி "களுக்கென்று சிரித்த அனிதா "கை நழுவி ஓடி மறைந்தாள். நிர்மலாவிற்கோ மிகுந்த கோபம் வந்தது.

சற்று கோபத்தை அடக்கிக் கொண்டு அவளது நக்கலை ரசித்தாள்,

வர வர உன் கிண்டலுக்கு அளவில்லாம போச்சு.

"எல்லாம் உங்க அப்பா கொடுக்கிற செல்லம்", அவர் வரட்டும், வரட்டும் இன்னைக்கு சொல்றேன் என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள். அனிதாவின் சிந்தனைகள் எப்போதும் வித்தியாசமாக இருக்கும்.

காலை மணி 7.30 ஆச்சு.

நிர்மலா பரபரப்பானாள். அனிதா சீக்கிரம் வந்து இட்லி சாப்பிடு. பள்ளிக்கூடம் போற நேரமாச்சு என்று நிர்மலா அழைக்க, "இதோ வர்ரேம்மா "என்று வந்த அனிதா வாழை இலையில் பரிமாறப்பட்டிருந்த இட்லி சட்னியை பார்த்ததும்,

"வாவ்! பச்சை வாழை இலை, வெள்ளை இட்லி, சிவப்பு தக்காளிச் சட்னி... ட்ரைகலர்! நம் தேசியக் கொடி நினைவுக்கு வருதே. ஜெய்ஹிந்த்!" என்று சல்யூட் அடித்தாள்.

நிர்மலா ஆச்சரியப்பட்டாள்-"இட்லியிலும் தேசப்பற்றாசபாஷ்!" என்று மனதில் எண்ணிக் கொண்டாள் நிர்மலா.

அன்று பள்ளிக்குச் சென்று மாலை வீடு திரும்பிய அனிதா, புதிதாக வீட்டு வேலைக்குச் சேர்ந்த குருவம்மாவையும், அவளுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியையும் பார்த்தாள்.

"இவங்க யார் அம்மா?" என்று கேட்டாள்.

"இவங்க குருவம்மா. எனக்கு ஒத்தாசைக்காக வேலைக்குச் சேர்த்திருக்கிறேன். இவள் குருவம்மாவின் மகள் சசிகலா.

அம்மாவுக்கு ஒத்தாசைக்காக தினமும் அம்மாவுடன் வருவாளாம் என்றாள் நிர்மலா.

அனிதா அதிர்ந்தாள். "ஆண்ட்டி, ஏன் அவள் பள்ளிக்கூடம் போகலையா?

குருவம்மா நெகிழ்ந்தாள். "மூன்று வீடுகளில் வேலை பார்க்கிறேன் கண்ணு. யாரும் இப்படிக் கேக்கலை.

அவளை நாங்க பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலை.

நானு படிக்கலை. என் பொன்னாவது நாலு எழுத்து படிக்கணும்னு எனக்கு ஆசை. அவங்கப்பாரு பொம்பளப்புள்ள படிச்சு என்ன செய்யப் போவுதுண்ணு சொல்றாரு என்றாள்.

அந்த வார்த்தைகள் அனிதாவின் காதுகளில் இடியாய் இறங்கியது.

என்ன? இப்படியும் ஒரு தந்தையா? பெண் கல்வியின் பெருமை அறியாத குடும்பமா?

என்று சற்றே குரலை உயர்த்திக் கேட்டாள்.

திரும்பி அம்மா நிர்மலாவைப் பார்த்தாள்.

“அம்மா, நாம சசிகலாவை பள்ளியில் சேர்த்து நன்கு படிக்க வைக்கணும்" என்று உறுதியுடன் சொன்ன அனிதா செய்த அவசர அவசர ஏற்பாட்டின் விளைவு,

முன்புறத் திண்ணையில் அனிதா சசிகலாவிற்கும், பின்புறத் தோட்டத்தில் நிர்மலா குருவம்மாளுக்கும் ஆசிரியைகளாய் மாறிவிட்டனர்.

"அ னா ஆவன்னா, இனா, ஈ யன்னா..." என்று கற்பிக்க வீடே குருகுலமாய் மாறியது. இரண்டு மாதங்கள் கடந்தன. குருவம்மாள் தன் பெயரைக் கையெழுத்துப் போடக் கற்றுக் கொண்டாள்.

சசிகலா அடிப்படைக் கல்வியைக் கற்றுக் கொண்டாள். ஜூன் மாதம் வந்தது, அனிதாவின் ஏற்பாட்டில் சசிகலா அருகிலுள்ள பள்ளியில் நுழைவுத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டாள்.

நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற சசிகலா பள்ளியில் சேர்க்கப்பட்டாள். புதிய சீருடை, புதிய பை, புத்தகங்கள் என அனைத்தும் தயாரானது.

புதிய சீருடையில் பள்ளிக்குச் செல்லத் தயாராகி நிற்கும் சசிகலாவைப் பார்த்து

குருவம்மாவின் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது.

அனிதா சசிகலாவை அருகில் அழைத்து : "சசிகலா, நீ பெரியவளாகி என்னவாக வரணும்னு விரும்புகிறாய்?"

சிறுமி வெட்கம் கலந்த சிரிப்போடு, "நான் உன்னைப் போல ஆசிரியையாவேன்!" அக்கா என்றாள்.

அனிதா அவளின் தோள்களில் பெருமிதமாகத் தட்டினாள். பின்பு ஆண்ட்டி, சசிகலா ரெண்டு பேரும் ஒண்ணு தெரிஞ்சுக்கணு,

நம் பாரதியார்

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார் "வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி" என்று நமது முண்டாசுக் கவிஞர் பாரதியார் பாடியிருக்கிறார் என்று அழகாக பாடி காட்டினாள்.

அவரது கனவை நாம் மெய்ப்பிக்க வேண்டும். சரிதானே!

என்ற அனிதாவின் கேள்விக்கு, குருவம்மாளும் சசிகலாவும் மகிழ்ச்சியுடன் தலையசைத்தார்கள்.

அனிதாவின் தாய் நிர்மலா தன் மகளின் தீர்க்கமான முயற்சியை எண்ணி பெருமிதம் கொண்டாள்.

அவளின் மனம் படுசுட்டியான மகளின் துணிவு, சமூகப் பொறுப்பு மற்றும் அதைச் சாதிக்கும் திறன் ஆகியவற்றைப் பார்த்து பெருமிதம் கொண்டது.

இந்த ஒரு அனிதா மட்டுமல்ல

இது போல சிறுவர் சிறுமியர் பெண் கல்விக்கு அவர்களால் இயன்றவரை அன்றாட வாழ்விலே ஏதோ ஒரு வகையில் முயற்சித்தால் நிச்சயம் பாரதியின் கனவு நனவாகும் அல்லவா என்று உள்ளம் பூரிக்க, அனிதாவைப் பார்த்தாள்,

அப்போது நிர்மலாவின் அலைபேசியின் அழைப்பு மணி அவைவரின் கவனத்தை ஈர்த்தது...

நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ..."

என்ற பாடல் அழைப்பு மணியாக நிர்மலாவின் அலைபேசியில் ஒலித்தது. நிர்மலா அலைபேசியைப் பார்த்தாள், ஆனால் அவளுக்கு அதை நிறுத்த மனம் வரவில்லை. அனைவரின் காதுகளிலும் அந்தப் பாடல் ஓங்கி ஒலித்தது

அந்தப் பாடலை தானும் உடன் பாடினாள்.

நல்லதோர் வீணை செய்தே

. என்ற பாடல் வரிகளைப் பாடியபடி அனிதாவை ஆரத் தழுவி உச்சி முகர்ந்தாள்.

அன்னையின் அணைப்பில் இருந்த அனிதா, தன் ஓரக்கண்ணால் சசிகலாவைப் பார்த்தாள்.

# வள்ளுவரும் இயற்கையும்

## ஒரு பசுமைச் சிந்தனை

**திருக்குறளின் பார்வையில் இயற்கையும் ஐந்து தத்துவங்களும்**

இன்றைய உலகத்தில் காலநிலை மாற்றம் மனித வாழ்வுக்கே பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. இதற்கான முக்கிய காரணம், *carbon dioxide CO2* போன்ற *Greenhouse gases* அதிகமாக வெளியேற்றப்படுவதுதான். இவை பெரும்பாலும் வாகனங்கள், கட்டிடக் கட்டுமானங்கள் ஆகியவற்றால் உற்பத்தியாகின்றன. மரங்களை வெட்டுவது, நகர வளர்ச்சிக்காக இயற்கையை அழிப்பது போன்ற செயல்கள் காற்றின் தூய்மையை குறைத்து விட்டன. இதற்குப் பதிலாக, அமெரிக்காவில் உள்ள விஞ்ஞானிகள் *Artificial Trees* எனப்படும் செயற்கை மரங்களை நிறுவ முயலுகின்றனர். இது அதிக செலவில் உருவாகிறது. இந்தச் சூழ்நிலையில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் சொன்ன குறள்கள் காலநிலை மாற்றத்தையும், அதன் விளைவுகளையும் நம்மிடம் எச்சரிக்கின்றன. இது நமக்கு வியப்பூட்டும் விஷயமாக இருக்கிறது.

தீ - குறள் 267

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு."

தீ என்பது நம் வாழ்வில் மிக முக்கியமானது., உள்ளவனின் துன்பம், பொன்னைத் தூய்மைப்படுத்தும் நெருப்பைப் போல வலிமை தரும் என விளக்கியுள்ளார். இன்று, தீ மூலம் வெப்பம், மின் உற்பத்தி, உலோக உருக்குதல் போன்றவை நடக்கின்றன. இது போலவே, காலநிலை சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கத்துடன் நாம் முனைப்பாக இருந்தால், நிலைத்த வாழ்க்கை சாத்தியமாகும்.

காற்று - குறள் 941

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று."

காற்று, நீர், உணவு - இவை மூன்றும் மிகுந்தாலும், குறைந்தாலும், நம் உடல்நலத்திற்கு ஆபத்தாகும். இன்று காற்றில் CO2 அதிகரிக்கிறது. இந்த நிலை மனித உயிர் நிலைப்பாடு குறைவதற்குக் காரணமாகிறது. இதனை சமாளிக்க, *Direct Air Capture (DAC)* போன்ற தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன. திருவள்ளுவர் இதை முன்னரே உணர்த்தியுள்ளார்.

வானம் - குறள் 18

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு."



மழை வராமல் போனால், கடவுளையும் மக்கள் வணங்க மாட்டார்கள். மழை என்பது வானின் ஆசீர்வாதம். அது இல்லையெனில், நிலம் உலர்கிறது, வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இது, மழை குறைவால் ஏற்படும் பசுமை குறைபாடுகளைக் கூறும் காலநிலை மாற்றத்தின் நேரடி விளைவு எனக் கொள்ளலாம்.

*பூமி - குறள் 733*

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு."

ஒரு நல்ல நாடு (பூமி) என்பது, பசி, நோய், பகைமை இல்லாததுதான். இது உயிர்வாழ்வு நிலை மற்றும் நிலத்தின் பாதுகாப்பு பற்றியது. நிலம் வளமாக இருந்தால், மக்கள் பாதுகாப்பாக வாழ முடியும். இது தான் நிலத்தை பாதுகாப்பதின் முக்கியத்துவம்.

*நீர் - குறள் 20*

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு."

மழை இல்லையெனில், இயற்கையின் ஒழுக்கமும் அழிவடையும். பசிக்காலங்களில் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆகவே, மழைக்காலங்களில் நீரை சேமிப்பது மிக அவசியம். இந்தக் குறள், உணவுப் பாதுகாப்புக்கும், காலநிலை வறட்சிக்கும் இடையிலான தொடர்பை காட்டுகிறது. சுருக்கமாக,

திருவள்ளுவர் சொன்ன குறள்கள், ஐந்து தத்துவங்களின் மூலம் இயற்கைச் சமநிலையை பேணும் வழிகளை நமக்குச் சொல்லுகின்றன. இவை அனைத்தும் ஐநா (UN) நிலைத்த வளர்ச்சி குறிக்கோள்கள், குறிப்பாக SDG-13 (Climate Action) மற்றும் SDG-15 (Life on Land) உடன் ஒத்துப்போகின்றன. காற்று குறித்த சிக்கல்களைத் தீர்க்கும் வழிகளைத் தொடர்ந்தும் இக்கட்டுரை விரிவாக ஆராயவுள்ளது.



**Dr. முகமது ஹுசைன்**
**அப்துல் ஜப்பார், Ph.D.**
மிச்சிகன், அமெரிக்கா

## தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகள்

திறன்மிக்க அறிவியல் நுட்பங்கள் இன்று உருவாகி வருகின்றன. அதில் ஒன்று தான் *Artificial Trees* எனப்படும் செயற்கை மரங்கள். இவை மரங்களைப் போல் *photosynthesis* செயலின் மூலம் கார்பன் டைஆக்சைடு (co2) ஐ சுரந்து தூய்மையான காற்றை வழங்குகின்றன.

உதாரணமாக, *Arizona State University*-யின் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கிய செயற்கை மரங்கள், இயற்கை மரங்களை விட 1,000 மடங்கு அதிகமாக co2 ஐ சுரக்கும் திறன் கொண்டவை (Lackner, 2019). இந்த நவீன கண்டுபிடிப்புகள், திருவள்ளுவரின் நுண்ணறிவை இயற்கையோடு இணைக்கும் பார்வையை பிரதிபலிக்கின்றன. மரத்தைப் போல இயங்கும் செயற்கை மரத்தை உருவாக்குவது சுலபமல்ல, ஆனாலும் அந்தக் குழுவின் நோக்கம் தெளிவானது - சமூகத்திற்குத் தூய காற்றை வழங்க வேண்டும். இதுவே திருவள்ளுவர் குறள் 267-இல் கூறியது:

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு."



அதாவது, நோக்கத்தை நிரந்தரமாக பின்பற்றினால், எவ்வளவு கடினமிருந்தாலும் வெற்றி நிச்சயம். இது செயற்கை மரங்களின் நோக்கத்தையும் திருக்குறளின் எண்ணத்தையும் ஒரே கோட்டில் இணைக்கிறது.

# மல்லிகை பந்தல்

சூரியன், பொன்னாடை போடுவது போல ஒரு பசுமை ஒளியுடன் எழுந்தது காலைப் பொழுது. நிலத்தின் மேல் படரும் பனித்துளிகள் ஒளிர்ந்தன. சின்னஞ்சிறு பறவைகள் ஒவ்வொன்றும் கூவி, “இது ஒரு புதிய நாள்” என்று அறிவித்தன.

கண்ணன், எழுபது வயது கடந்த ஒரு முதியவர். அவர் திருச்சி அருகே இருக்கும் தாயனூர் கிராமத்தில் வசித்து வந்தார். மனைவி இறந்த பிறகு அவரின் இரு பையன்களும் சென்னைக்கு வந்து தங்களுடன் தங்குமாறு கேட்டார்கள். மனைவியின் நினைவுகளுடன் அங்கேயே இருக்க அவர் விரும்பினார். அதனால் அவரின் இரு மகன்களும் அவ்வப்போது அங்கு வந்து போவார்கள். இருத்தும் தனிமை அவரை வாட்டியது.

அவருக்கு மூட்டுவலி இருக்கிறது, ஆனாலும், காலையில் நடைபயிற்சி தவிர்த்ததில்லை. அவரது வீட்டின் முன்பு இருந்த இடம் ஒரு காலத்தில் செடி,கொடிகளுடன் பச்சை பசேலென இருந்த தன் மனைவி வைத்து பராமரித்த தோட்டம் இப்போது காடாக மாறியிருந்தது. ஆனால் அதைப் பார்த்தவுடனே அவருக்குள் ஒரு கழிவிரக்கம் எழுந்தது.“எத்தனை வருடமாச்சு, என் மனதைப் போல இந்தத் தோட்டமும் வாடி போச்சு,” என்று தனக்குள் நினைத்தார்.

அந்த தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தபோது, ஒரு மூலையில் மட்டும் மல்லிகை செடி ஒன்று வளர்ந்து அதில் மல்லிகை மலர்ந்து அந்த இடத்தையே வாசனைமயமாக்கி கொண்டிருந்ததை அப்போது தான் தற்செயலாகப் பார்த்தார் . வாடிய தோட்டத்தில் வெண்மையாக மலருடன் , வாசனையுடனும் ஒரு மல்லிகை செடி. அந்த வலியான தருணத்தில் கூட, அது அவருக்கு உயிர் ஊட்டுவதை போல இருந்தது. வீசும் காற்று அந்த மணத்தை பறித்துக் கொண்டு அந்த பகுதி முழுவதும் சென்றது போல தோன்றியது. கண்ணன் மெய் மறந்தபடி நின்றார் .



**இந்துமதி ஜெயபால்,**
டப்ளின்

“இந்த நிலத்தில் நீயா வளர்ந்தாய்? நீயும், என்னைப் போல வேறெந்த ஆதரவும் இல்லாமலா உயிர் வாழ்கிறாய்?” என்ற சிந்தனையில் மூழ்கினார் .

அந்த மாலை, கண்ணன் வீட்டின் முன்பு பேச்சு சப்தம் வந்தது. யார்? என்று பார்க்க கண்ணன் ஜன்னல்வழியாக எட்டிப் பார்த்தார்.ஒரு சிறுமி, சுமார் 10 அல்லது 11வயதுக் குள்இருப்பாள். மஞ்சள் நிற ஆடையில் , தொப்பியுடன், தோட்டத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அப்போதுதான் ,அவருக்கு நினைவுக்கு வந்தது அவள் மஞ்சரி என்று நகரத்திலிருந்து குடும்பத்துடன் இங்கு குடிபெயர்ந்து பக்கத்து வீட்டில் குடியிருந்தார்.

உடனே வெளியில் சென்று கண்ணன் அவளை பார்த்துக் கேட்டார் . "இந்த மல்லிகை செடியை நீயா வளர்த்த?"மஞ்சரி புன்சிரிப்புடன். "ஆமாம் தாத்தா, நான் தான் இந்த செடியை இங்கே நட்டு வைத்தேன்.

இந்த மல்லிகையை இங்கே நட்டு, தினமும் தண்ணீர் ஊற்றினேன். யாரும் கவனிக்காத இடம், நம்ம தேடிக் கவனிச்சா, என்னன்னு தோணுச்சு தாத்தா?" என்றாள். அந்த பதில் கண்ணனை நிமிர வைத்தது.“ தோட்டத்துக்கே மணம் வந்துடுச்சே... அதுவும் உன்னால!” என்றான் கண்ணன், விழிகளில் பரவசத்துடன் .

அடுத்த நாள் காலை நேரமே புதிய உற்சாகத்தைத் தந்தது. கண்ணன் தன்னுடைய பழைய தோட்டம் பற்றிய நினைவுகள் கொண்டார் . தனது வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்தையும், காதலையும், நண்பர்களையும், குடும்பத்தையும் அந்த இடம் பார்த்திருக்கிறது. ஆனால் காலத்தோடு அது வாடியிருந்தது.

ஒரு வாரத்திற்குள் கண்ணனும், மஞ்சரியும் தோட்டத்தின் புதுமை பணியில் ஈடுபட்டனர். பழைய வாடிய செடிகளை அகற்றினார்கள், புதிய மண்ணை சேர்த்தார்கள். பழைய இடத்தை செதுக்கி வேலி அமைத்தனர்.

மஞ்சரி கைப்பையில் வண்ணப்பட பூக்களின் விதைகளை வைத்துக்கொண்டு வந்தாள். “இவையெல்லாம் புது வாழ்க்கைக்கு விதைகள் தாத்தா,” என்றாள். கண்ணன் சிரித்தான். அவனது மனமும் ,உடலும் மெல்ல மாறத் தொடங்கின.

இப்போது மஞ்சரியின் நட்பு ஒரு வித ஜீவனாக, புதிய நோக்கமாக மல்லிகை மட்டுமல்ல கண்ணனுக்குள் ஒரு ஜீவன் வந்தது .

மாதங்கள் பறந்தன. ஒரு மழைக்கு பிறகு, தோட்டம் நன்கு பசுமைப்பட்டு, பூந்தோட்டமாக வளர்ந்து செழித்தது . மல்லிகை மட்டும் இல்லாமல், செம்பருத்தி, நந்தியாவட்டம், ரோஜா போன்ற பல பூச்செடிகள் தோட்டத்தில் வளர்ந்து செழித்தன .

மஞ்சரியின் அந்த சிறு செயல் கண்ணனுக்குள் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஒரு வாழ்வு இல்லாத இடத்தில் மீண்டும் உயிர் கொடுத்தது. கண்ணனின் பிறந்தநாளன்று, மஞ்சரி கையில் ஒரு பூங்கொத்து வைத்துக்கொண்டு வந்தாள். “தாத்தா, இப்போ இந்த தோட்டம் மட்டும் இல்ல, நீங்களும் மாறிட்டீங்க, பிறந்த நாள் வாழ்த்துகள் ,” என்றாள்.

கண்ணன் சிரித்தார். “இது உன் செயல் மஞ்சரி . என் வாழ்க்கை பசுமையில்லாத தோட்டம்னு நான் நினைத்தேன். ஆனா, ஒவ்வொரு மனமும் வாசனை தரும் செடி போலதான். எனக்கு நீ தான் அதை உணர்த்தினாய் என்று நெஞ்சார சொன்னார்.



அந்த மல்லிகைச் செடியை அவர்கள் நாள்தோறும் பார்த்து மகிழ்ந்தார்கள் . சில நாட்களில், கண்ணன் ஒரு சின்ன மரக்கூடம் அமைத்தார். அதில் தோட்டம் அமைப்பது பற்றிய புத்தகங்கள், விதைகள் அனைத்தும் கிடைக்கும் வகையில் செய்தார் கள், மஞ்சரியின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்ட அந்த இடம் ‘மல்லிகை பந்தல்’ எனப் பெயர் பெற்றது.




# மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டம்

அனைவருக்கும் இனிய வணக்கம்.

சங்கத்தின் வரலாற்றில் பொன்னாலே பொலிவூட்டும் சிறப்பு நாள். நம் பொன்விழா காணும் நம் தமிழ்ச் சங்கம், ஐம்பது ஆண்டுகளாக சமூகத்திற்கு அளித்த பங்களிப்பு, நாம் கொண்டாடும் பொன்விழா நிகழ்வாக மலர்ந்துள்ளது. மிச்சிகன் தமிழ் சங்கத்தின் பொன்விழா நிகழ்வை இரண்டு நாட்களாகக் கொண்டாட செயற்குழு திட்டமிட்டது.

வழக்கமான கலை நிகழ்சிகள், சிறப்பு விருந்தினர் நிகழ்ச்சி என்று ஒரு நாள் நிகழ்வாக இல்லாமல் அன்னைத் தமிழுக்கு நம் தமிழ்ச் சங்கம் சார்பில் பெருமை சேர்க்கும் வகையில் ஒரு நிகழ்வை





முன்னெடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தோம். தமிழுக்கு பெருமை சேர்க்க நாங்கள் தேர்ந்தெடுத்தது உலகப்பொது மறையாம் திருக்குறளை… நாம் திருக்குறள் மாநாடு ஒன்றை நடத்தலாம் என்று முடிவெடுத்தோம்.

அரங்கத்தில் திருவள்ளுவர் உட்பட பழங்கால தமிழ் அறிஞர்கள் நிறைந்த தமிழ்க் குடில் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அடுத்து டெட்ராய்ட் உணருயிர் கலைக்கூடத்தின் கலைஞர்கள் கொம்பு முழங்க, முரசு மற்றும் தாள வாத்தியங்களுடன் சிறப்பு விருந்தினர்களையும், திருக்குறள் ஆராய்ச்சியாளர்களையும் ஊர்வலமாக மேடைக்கு அழைத்து வந்தனர்.

இந்த வரலாற்று நிகழ்வில் முக்கிய அங்கம் வகித்த திருக்குறள் மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக அய்யா சுப. வீரபாண்டியன் அவர்களையும், அய்யா புலவர் செந்தலை கவுதமன் அவர்களையும் வரவேற்றோம். மேலும் இம்மாநாட்டில் திருக்குறள் ஆராய்ச்சி கட்டுரைகளை பல திருக்குறள் ஆய்வாளர்கள் வெளியிட்டார்கள். மேலும் திருக்குறளை சிறப்பிக்கும் விதமாக திருக்குறள் அறிவாற்றல் போட்டிகள் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் நடத்தப்பட்டது.

பொன்விழா மலர், மதிப்பிற்குரிய மேயர் தெரசா ரிச் அவர்களால் வழங்கப்பட்டதை, மிச்சிகன் பிரதிநிதிகள் சபையின் எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றிக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய ரஞ்சீவ் பூரி அவர்கள், மக்களின் முன்னிலையில் பெற்றுக்கொண்டார்.

திரு ஈரோடு மகேஷ், சிறப்பு அழைப்பாளராக நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டு, சிறப்பான விவாத மேடையை நடத்தினார். அவருடைய பேச்சால் மக்கள் வியப்பில் ஆழ்ந்தனர். SAC வசந்த், மாயக்கலை வித்தகர், தன் மாயக்கலை திறமையால் மக்களை வியப்பில் ஆழ்த்தினார்





தமிழ் சங்கத்தின் பொன் விழாவின் முதல் நாள் இனிதாக முடிவடைந்தது.



இரண்டாம் நாள் பிரம்மாண்ட மான பறை இசையுடன் துவங்கியது. பெருவாரியான மக்கள் இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்து, தலைவாழை விருந்தான சைவ மற்றும் அசைவ உணவுகளை சுவைத்து, மிகுந்த மகிழ்ச்சியுடன் கலை நிகழ்ச்சிகளையும் கண்டு மகிழ்ந்தனர்.

இப்பொன்விழா மாநாட்டில் உலகப் புகழ்பெற்ற இசையமைப் பாளர் டி. இமான் அவர்களின் பிரம்மாண்டமான இன்னிசை இசை நிகழ்ச்சியுடன் இரண்டாம் நாள் இனிதே முடிவடைந்தது.

இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்து, தங்கள் மதிப்புமிக்க நேரத்தையும் அன்பையும் வழங்கி, இந்த விழாவை சிறப்பித்துள்ள சிறப்பு விருந்தினர்களுக்கும், அன்பு உறுப்பினர்களுக்கும், உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் மிச்சிகன் தமிழ் சங்கம் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

நம் சங்கத்தின் ஒற்றுமையும், சேவையும், பாசமும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து, இன்னும் பல சாதனைகள் நிகழட்டும் என அன்புடன் வாழ்த்துகிறோம்.

மேலும் இப்பொன்விழா மாநாட்டிற்கு மிகவும் உதவியாக இருந்த பேரவைக்கு மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# மழையின் மீது காதல்!

நீ வருவாய் என தெரிந்ததும்,
என் மனதில் ஒரு பேரானந்தம்,
மேகங்கள் கூடுகையில்,
என்னுள் உற்சாகம் கூடியது,
உன் அண்ணன் இடியும் மின்னலும் மிரட்டினாலும்,
உன்னை காண மறவாமல் வருவேன்,
நீ தந்த முத்தங்களால் (மழை துளிகள்),
உறைந்து போனேன் என்னை மறந்தவாறு,
உன் வரவால் மரங்கள் கூட நடனம் ஆடியது,
மண்ணும் கூட நறுமணம் ஆனது,
இளையராஜா காதல் பாடல் போல,
இருவரும் காதல் வயப்படும் பொழுது,
திடீரென மறைந்தாய்,
என் மனதை கரைத்தாய்,
உனக்காக காத்திருப்பேன்,
கையில் காபி கோப்பையுடன்,
வானத்தைப் பார்த்தவாறு!





**செந்தில்ராஜ்,**
மிச்சிகன்

# ஓவியங்கள்



ஹஷ்வந்த் வினோத்கண்ணன்
சன் ப்ரேரி, WI



சாத்விகா சங்கர்
மேடிசன், WI



சம்யுக்தா சத்யநாராயணன்
மேடிசன், WI






சேயா தினேஷ் ராவ்,
மிச்சிகன்





## மினசோட்டாத் தமிழ்ச் சங்கத்தின்

# மறக்க முடியாத இந்திய சுதந்திர நாள் விழா நிகழ்வு

ஒவ்வொரு ஆண்டும் ஆகத்து மாதம், மினசோட்டா இந்தியச் சங்கம் நடத்தும், இந்திய சுதந்திர நாள் கொண்டாட்டத்தில், மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் கலந்து கொள்ளும். இந்த நிகழ்வில் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலச் சங்கங்கள், பல தொண்டு நிறுவனங்கள், வணிகம் சார்ந்த அமைப்புகளும் பங்கு பெறும். பல்லாயிரக்கணக்கான அமெரிக்கர்களும், பிற மொழி பேசும் மற்ற இந்திய மாநில மக்களும் பார்வையாளர்களாக வருவார்கள். இந்த 2025 ஆண்டு நிகழ்வில் எங்கள் மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் சார்பாக சாவடியை அமைத்து, சங்கம் மற்றும் மினசோட்டாத் தமிழ்ப் பள்ளியின் செயல்பாடுகளை, பார்வையாளர்களுக்கு எடுத்துக் கூறினோம்.

தமிழகத்தில் இருந்து நம் தமிழர் கலைகளைக் கற்றுத் தர வந்திருந்த பறையிசை கலைஞர் பத்மசிரி திரு.வேலு ஆசான், திரு.நாகராசு கருப்பையா - தவில், பம்பை, திரு.இரவிச்சந்திரன் - நாயனம், திரு. சங்கர்கணேசு - மகுடப்பறை கலைஞர்களை நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றோம்.

அவர்கள் இசை அமைத்து எங்கள் தமிழ்ச் சங்கத்தை முன்னெடுத்து அழைத்துச் செல்ல, கரகம், சிலம்பாட்டம், புலியாட்டம் ஆடி அணிவகுப்பில் கலந்து கொண்டோம். எல்லா சங்கம் மற்றும் பார்வையாளர்களின் பார்வையும் நமது தமிழர் இசைக்கருவிகளின் இசையின் மேல் தான் இருந்தது.



மாலை வேளையில் நமது தமிழர் ஆடற்கலையை மேடையேற்ற எங்கள் தமிழ்ச் சங்கத்திற்கு சிறப்பு நேரத்தில் 30 நிமிடங்கள் கொடுத்திருந்தனர். அதில் இசைக் கலைஞர்களின் அறிமுக இசையோடு, படுகர் ஆட்டம், கழியல் ஆட்டம், ஒயிலாட்டம், சதிராட்டம், கரகாட்டம், பறையாட்டம், அனைத்து ஆடற்கலைகளும் ஒரே நேரத்தில் ஒரே மேடையில் ஆடி நிறைவு செய்தோம். விழாவில் நமது தமிழ்ச் சங்க நிகழ்வு தான் பதிவு செய்யப்படாத நேரடி இசைக்கருவிகளை இசைத்து, ஆடவும் செய்த நிகழ்ச்சியாக இருந்தது என்ற பாராட்டையும், பார்வையாளர்களின் பலத்த கைத்தட்டலையும் அள்ளிக் குவித்தது என்றால் மிகையல்ல.















# விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம்

விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம் 23 ஆம் ஆண்டு முத்தமிழ் விழாவை அக்டோபர் 5 ஆம் நாள் சன் ப்ரைரி பள்ளியில் வெகு சிறப்பாக கொண்டாடியது. இதில் இயல் இசை நாடகம் பிரிவுகளில் இருநூறுக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். சிறுவர்கள் இசைக்கருவிகளை இசைக்க, சங்கமம் குழு இசை கச்சேரியை நடத்த, முத்தாய்ப்பாக தி சர்மர்ஸ் குழுவினர் ஆடல் பாடலுடன் பறை இசை இசைத்தனர். முன்னதாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வு துவங்கியது. தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் சுஜாதா மோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்ற, துணை தலைவர் சங்கர் மாணிக்கம் குழந்தைகளுடன் சேர்ந்து நிகழ்ச்சியை தொகுத்து வழங்க, இணை பொருளாளர் சுவப்ன ஸ்ரீனிவாசன் நன்றியுரை ஆற்றினார். செயற்குழு உறுப்பினர்கள் ஜெயராமன் தர்மலிங்கம், ஜான்சிராணி பிரபாகரன், பவானி தினகரன், கார்த்திக் வெங்கட்ராம், நிரஞ்சனி ஐயர், சிவகுமார் பாலசுப்ரமணியம், கபில் காமராஜ், ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை கவனித்தனர். தலைவர் வைத்திநாதன் செல்வராசு ஆண்டு உரையுடன் TamilER, பேரவையின் அங்கமான அவசரகால குழுவையும், தமிழ்நாடு அரசின் அயலக நலவாரியத்தின் செயல்பாடுகளையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். பேராசிரியர் சுவாமிநாதன் பாலச்சந்திரன் அவர்கள் ஜனாதிபதி தன்னார்வலர் விருது பெற்றவர்களுக்கு விருதினை வழங்கி, இரண்டு ஆண்டுகள் செயல்பட்ட செயற்குழு உறுப்பினர்களையும் கௌரவித்தார். கார்னேலியஸ் சுகுமாரன் தலைமையிலான குழு அறுசுவை உணவை அனைவருக்கும் வழங்கினர்.



## தமிழர் வாழ்வியலில் கலையும் இலக்கியமும்

# தாக்கமும் சாத்தியங்களும் பேரவை விழா-இலக்கிய இணையமர்வு

முனைவர். அருள்ஜோதி முரளிதரன் தலைவர், இலக்கியக்குழு.

மூவாயிரம் ஆண்டு இலக்கிய வளம் கொண்டது நம் தமிழ் மொழி. அத்தகு பெருமைமிகு மொழிக்கு புலம்பெயர் தேசத்தில் கடந்த 38 வருடங்களாக மாபெரும் விழா எடுத்து மகுடம் சூட்டி வருகிறது வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை. வருடம் முழுவதும் பேரவையின் இலக்கியக்குழு வழியே மாதாந்திர இணையவழி இலக்கியக்கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பேரவையின் இந்த வருட இலக்கியக் கூட்டங்கள் வாசகர்களுக்கும், இலக்கிய ஆர்வலர் களுக்கும் பெருந்தீனி. மரபு மற்றும் சமகால இலக்கி யத்தை முன்வைத்த தீவிர இலக்கிய உரை யாடல்கள்/விவாதங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு சமகால இலக்கியத்தில் இயங்கும் ஆளுமைகள் தமிழ்நாட்டில் இருந்து இணைய வழி இலக்கியக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்து வருகின்றனர். சங்க இலக்கிய வகுப்புகள் மற்றும் திருக்குறள் வகுப்புகளும் வருட துவக்கத்தில் நடைபெற்றன.

வடகரோலைனாவின் ராலே நகரில் 38 வது பேரவை விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. பேரவை விழாவின் இலக்கிய இணையமர்வுகளில்





கலந்துகொள்வதற்காக தமிழின் மூத்த எழுத்தாளர் திரு.வேணுகோபால் அவர்களும், எழுத்தாளர்/ ஆய்வாளர் திரு ஸ்டாலின் ராஜாங்கம் அவர்களும் தமிழ்நாட்டி லிருந்து வருகை புரிந்திருந்தனர்.

ஜூலை 4 மற்றும் 5 தேதிகளில் நடைபெற்ற இணையமர்வுகளில், முதல் நாள் இணையமர்வு, அமெரிக்காவில் வசிக்கும் புலம்பெயர் எழுத்தாளர்களையும், புதிதாக எழுத வருபவர்களையும் ஊக்குவிக்கும் விதமாக "எழுதும் கலை" என்ற தலைப்பில் ஒருங்கிணைக்கபட்டிருந்தது. பேரவையின் மேனாள் தலைவர், தற்போதைய செயற்குழு உறுப்பினர் முனைவர் திரு.பாலசுவாமிநாதன் அவர்கள் அறிமுக உரை வழங்கி நிகழ்வைத் துவங்கி வைத்தார். எழுத்தாளர் திரு. சு.வேணுகோபால் ஒரு படைப்பில் உண்டாகி வரவேண்டிய நம்பகத்தன்மை குறித்து தனது பார்வையை முன்வைத்து எழுதும் கலை குறித்து விரிவாக சிறப்புரையாற்றினார். ஆய்வாளர் ஸ்டாலின் ராஜாங்கம், ஒரு கட்டுரை புனைவின் நிலைபேறு தன்மைக்கு நிகராக உருவாக்கவேண்டிய சாத்தியங்கள் குறித்துப் பேசினார். இருவரது உரைகளும் புலம்பெயர் நிலத்திலிருந்து எழுத வரும் எழுத்தாளர்களுக்கு ஊக்கமாக அமைந்தது. நிகழ்வில் கவிஞர்/இயக்குநர் சீனு ராமசாமி அவர்களின் "மேகங்களின் பேத்தி" என்ற கவிதை நூல் பேரவைத் தலைவர் விஜய் மணிவேல் அவர்களால் வெளியிடப்பட்டது. நூல் வெளியீட்டுக்கு பிறகு சீனு ராமசாமி நவீன கவிதைகள் குறித்து உரையாற்றினார். முதல் நாள் இணையமர்வு சிறப்பாக நிறைவு பெற்றது.



இரண்டாம் நாள் இணையமர்வு 'தமிழர் வாழ்வியலில் கலையும் இலக்கியமும்-தாக்கமும் சாத்தியங்களும்' என்ற தலைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் புலவர் செந்தலை கவுதமன், எழுத்தாளர்கள் சு. வேணுகோபால், ஸ்டாலின் ராஜாங்கம், இயக்குநர்கள் மாரிசெல்வராஜ், லிங்குசாமி கவிஞர் சினேகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

புலவர் செந்தலை கவுதமன் அவர்கள் தமிழர் வாழ்வில் சாதியற்ற சமுகம், சாதிய சமுகம் என்ற இரு நிலைகளை எடுத்துரைத்தார். தமிழர் வாழ்வில் உறைந்திருக்கக் கூடிய பண்பாட்டுக்கோலங்கள் குறித்து எழுத்தாளர் சு. வேணுகோபாலும், வரலாற்றில் அறியப்படாத சமூகச்



செயல்பாட்டாளர்கள் குறித்து ஸ்டாலின் ராஜாங்கமும் உரையாற்றினார்கள். இந்நிகழ்வில் கவிஞர்/இயக்குநர் லிங்குசாமியின் “பெயரிடப்படாத ஆறுகள்” என்ற ஹைக்கூ கவிதைத் தொகுப்பும், இலக்கியக்குழு ஆலோசகர் திரு.கார்த்திகைச்செல்வன் (பறம்புநாட்டான்) அவர்களது வடுக்கால் வெண்பரி” என்ற கவிதைத் தொகுப்பும் வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்ட புத்தகங்கள் குறித்து சீனு ராமசாமி, ராஜ்குமார் பெரியசாமி ஆகியோர் பேசினார்கள். பாடலாசிரியர் சினேகன் சங்க இலக்கியங்கள் குறித்து உரை நிகழ்த்தினார். இயக்குநர் மாரி செல்வராஜ் கலை-இலக்கியத்தில் அவரவர் நிலையில் நின்று உண்மையைப் பேசி ஒரு விவாதத்தை உருவாக்க வேண்டும் என்கிற முக்கிய செய்தியை விடுத்துச்சென்றார். இணையமர்வுகள் அரங்கம் நிறைந்த அமர்வுகளாகவும், நேரம் தாண்டியும் வாசகர்களை அரங்கிற்குள் இருத்தி வைத்த உரைகளாக சிறப்பு விருந்தினர்களது உரைகள் அமைந்திருந்ததும் கூடுதல் சிறப்பு .

இலக்கியக்குழு ஆலோசகர் சசிகுமார் ரங்கநாதன், கார்த்திகைச்செல்வன் வரவேற்புரை வழங்க, இலக்கியக்குழு தலைவர் அருள்ஜோதி முரளிதரன் தலைமையுரை வழங்கினார். இலக்கியக்குழு துணைத் தலைவர் சுபா காரைக்குடி, உறுப்பினர் ராமலெட்சுமி நிகழ்வைத் தொகுத்து வழங்கினர். கோதை ஜெயராஜ், ஷம்மு ரவி, வாசுதேவன் இந்துமதி ஜெயபால் உள்ளிட்ட இலக்கிய குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஒருங்கிணைப்பில் உதவி செய்தனர். நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

இரண்டு நாள் நிகழ்வுகளின் முடிவுகளில் எழுத்தாளர்-வாசகர் கலந்துரையாடல்கள் நடைபெற்றது. இரண்டு நாள் இணையமர்வுகளும் பேரவையின் இலக்கியக்குழு சார்பில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. பேரவை விழாவிற்கு வருகை புரிந்தவர்களில் பலர் இலக்கிய இணையமர்வின் அறிவிப்பைக் கண்டு இணையமர்வில் கலந்து கொண்டு எழுத்தாளர்களுடனான இரண்டு நாள் உரைகள் மற்றும் கலந்துரையாடலுக்கு பிறகு வாசிப்பை நோக்கி நகர்ந்திருக்கின்றனர் என்பதும், பேரவை விழாவுக்கு பிந்தைய இணைய வழி இலக்கியக்கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர் என்பதும் இது போன்ற இலக்கிய இணையமர்வுகளின் வெற்றி. கடைசி ஒரே ஒரு வாசகன் இருக்கும் வரைக்கும் இலக்கியக்கூட்டங்கள், கலந்துரையாடல்கள் நடைபெற வேண்டும். ஆழ்ந்த வாசிப்பே ஒரு பண்பட்ட சமுதாயத்தை உருவாக்கும்!













# யாதுமாகி நின்றாய் தமிழே! கவியரங்கம்

**ஜான்சிராணி பிரபாகரன்**

வட அமெரிக்கத் தமிழ்சங்கப் பேரவையின் 38ஆவது தமிழ் விழாவில் ஜூலை 4 அன்று நடைபெற்ற கவியரங்கம் முத்தாய்ப்பாய் அமைந்தது. கவிஞர் சினேகன் தலைமையில் "யாதுமாகி நின்றாய் தமிழே!" என்ற தலைப்பில் கவிஞர்கள் செல்வதுரை பாஸ்கரன், அருள் ஜோதி முரளிதரன், ரம்யா ரவீந்திரன், கார்த்திக் பால சுப்ரமணியன், கார்த்தீஸ்வரி வழவந்தான், ம.வீ.கனிமொழி, இராஜராஜன் லெட்சுமிகாந்தன், லோகன் கண்ணுத்துறை ஆகியோர் பங்குபெற்றனர். கவியரங்கத்தில் வாசிக்கப்பட்ட கவிதைகள் இந்த அருவி இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.



# கவியரங்கம் (FeTNA) தொடக்கம்

மொழி கொடுத்து
விழி கொடுத்து
வழி நடத்தும்
அன்னைத் தமிழே...
உன்னை வணங்குகிறேன்...

நான் உன்னை கொஞ்சுவதும்
நீ என்னை மிஞ்சுவதும்
அன்றாடம் மன்றத்தில்
கொண்டாடும் பண்டிகை தான்...

இன்றும் நான் நின்றாட
என் நாவில் நீயாட
உனைக்கண்டு உலகாட
அனுமதிடி கவிபாட...

உந்தன் துணைக் கொண்டு
தொடங்கும் போர் இன்று
மூளும் கணம் கண்டு
எழுந்து வணங்கட்டும்
சுழலும் நிலம் இன்று...

நீ, நான்
யாரென்று..
நீயே
கூறின்று...

பறந்து விரிந்த
நிலப்பரப்பில்...
பகட்டாய் வாழும்
பரப்பரப்பில்
திகட்டா திரவியம்
பருகிடவே...
திரண்டு வந்த உறவுகளை
தீந்தமிழ் கொண்டு
வணங்கிடுவோம்...
உலக வரைப்பட
கண்டங்கள் எல்லாம்

உயர்ந்து பார்க்கும்
ஒரு நாடு...

அதில் சிறந்து வழும்
உன் மக்கள் ...
அவர்கள் செய்யும்
மொழியாட்சி...இந்த
தமிழ் திருவிழாவே
அதற்கு சாட்சி...

இந்த அவையில்
எனக்கும் ஒரு நாற்காலி...
இது உன்னால்
கிடைத்தது தாயி...

பேரறிவு பெற்ற
பேரறிஞர்கள் திரள்.... இதில்
எப்படி கேட்கப்போகிறதோ
என் குரல் ..

கவியரங்கத்தைத் தொடங்கிய
அக்கா ஜான்சி பிரபாகரன்.

எட்டுத்திக்கும்
கவிமுரசு ஒலிக்க...
எட்டுக் கவிஞர்கள்
தயார்...

நல்லதோ... கெட்டதோ...
கரவொலி எழுப்பி
உற்சாகம் ஊட்ட
அறிவார்ந்த உறவுகள்...

உயர்ந்தே பறக்கட்டும்
தமிழ் கவிச் சிறகுகள்...
மொழிக்கு என்றே
ஒரு விழா... இது



மூன்று நாளு
திருவிழா...

அறிஞர்கள் கூடும்
பெரும் விழா.. இது
அகிலமேப் போற்றும்
உன் விழா ...

வா
இணைந்தே போவோம்
ஒரு உலா - நமை
எவர் வந்து பிரிப்பார்
கவிகளா...

அறம், பொருள், இன்பத்தில்
அறம் வெல்லும் வீரத்தில்
ஆகாயம் துகளாக
மாறிடும் தூரத்தில் ...

அடைக்காகும் பாரத்தில்
அழுகாத சாரத்தில்
அறிவியல் பேசாத
அசரீரி காலத்தில்...

அஞ்ஞானம் கோலத்தில்
மெஞ்ஞானம் ஆழத்தில்
விஞ்ஞானம் பேரத்தில்...

ஓசைக்கே ஒலி உரு
இல்லாத உலகத்தில்...
கடவுளர் மொழியின்றி
கல்லான லோகத்தில் ...
காற்றோடு அசைந்தாடி
இசைந்தோடி வந்தாயே...
எக்கணமும் எப்புறமும்
எனைக்காதல் கொண்டாயே...

யதுமாகி நின்றயே
தமிழே... இங்கே
யாவருக்கும்
பாடுபொருள் நீயே...

எத்தனைப் பேர் பாடினாலும்
பித்தனை நீ மறக்காதே...
இங்க எத்தனைப் பேர்
பாடினாலும் - இந்த
பித்தனை நீ மறக்காதே....

எனக்கும் உனக்கும் உள்ள
உறவை
எவருக்குமே உரைக்காதே...

பாடும் கவி
பாடட்டும்...
கேட்கும் செவி
கேட்கட்டும்...
தட்டும் கரம்
தட்டட்டும்-
கொட்டும் தமிழ்
கொட்டட்டும்...

இப்பொழுது செல்கிறேன்
பிற்பொழுதில் வருகிறேன்...

தொடங்கட்டும்
கவியரங்கம்..



# யாதுமாகி நின்றாய் தமிழே!

அருள்ஜோதி முரளிதரன், தென்விரிகுடா தமிழ்ச்சங்கம் கலிஃபோர்னியா

ஈரடியின் குறளாகி
கீழடியில் நின்ற மகள்.

பாரின் பழங்குடி
ஆதித்தமிழர் என்றுரைக்க
தோலிசைக் கருவியொடு
சுட்டமண் சிற்பத்தைச்
சான்றேந்தி நின்ற மகள்.

சிதைந்த உறைகிணற்றுக்குள்
புதைந்த இனத்தின் தொன்மையினை
உலகிற்குரைத்திடவே
ஆதனையும் குவிரனையும்
மாரேந்தி நின்ற
மொழித்தாயின் தலைமகள்.

இணையில்லாப் பெருநூல்
இலக்கண முதல்நூல்
காலக்கடிகாரம்
தொல்காப்பியமேந்தி
யாப்பு தனது காப்பாக
சீரும் தளையும் சிதையாத
திகட்டாத தெள்ளமுது.

செய்யுளோடு மரபும்
உவமையும் மெய்யும்
இணைந்த இயல் நான்கும்
தொகையும் வகையும்
ஒலி அளவு மாத்திரையும்
உயிரும் மெய்யும்
ஒருங்கே கொண்ட ஒளிப்பிழம்பு.

எல்லாச்சொல்லும்
பொருள்குறித்தனவென
தனித்தே நின்று மகுடம் சூடிய



ஓரெழுத்து அரசி.
எண்வகை சுவையும்
அணியென சூடிய அணங்கு.

அறம் பொருள் இன்பமென
உலகப்பொதுமறை தந்த
வான்புகழ் கொண்ட
வள்ளுவனின் அன்னை.

களவும் கற்பும் நிலவொழுக்காகி
அன்பின் வழியது உயர்நிலையாக
யாதும் ஊராய் யாவரும் கேளிரென,
எழுவகை திணையும் ஐவகை நிலமும்
எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்
காதலும் வீரமும் கவிதை பேச
அறமும் புறமும் தமிழர் வாழ்வென
மறத்தில் அறத்தை போற்றிய பேதை

கன்னல் போல் இனித்து
களி பேருவகை அளித்து
ஐம்பெரும் காப்பியத்தை
அங்கமெலாம் சூடி
முச்சங்கம் கண்ட
மூவேந்தின் மூத்தமகள்.
யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்

இனிதாவது எங்கும் காணோமென
எம் பாட்டன் பாரதியும்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு
நேர்
எம் பாவேந்தரும், பார்
உரைக்க பாடிட்ட தேனமுது.

கரையான் அரித்தாலும்
கடல்தான் செரித்தாலும்
வடமொழி திணித்தாலும்
இலக்கணமும் இலக்கியமும்
இரு கண்ணென நின்ற மகள்.

வேரோடிச் செழித்து நின்றதொரு
இனத்தின் தொல்வாழ்வை
மொழிப்போரில் வென்றெடுக்க
செந்தழலின் சாறெடுத்து
செஞ்சாந்தாய் பூசியவள்.

செம்மொழி மகுடம் சூடி
காலத்தேரில் பவனி வரும்
இளமை குன்றா தமிழ்மகள்.

உலக இலக்கியத்திற்கு
குன்றுமணி குன்றாமல்
முன்னைத் தொன்மையும்
பின்னைப் புதுமையுமாய்
ஓங்கி வளர்கிற மலைமகள்

தமிழே நீயென்
மரபறிவின் கொள்கலன்
பண்பாட்டின் கருவூலம்
விழுமியங்களின் விளக்கு
எம் தமிழ்க்குடிக்கு
யாதுமாகி நின்றாய் என் தமிழ் மகளே!



# யாதுமாகி நின்றாய் தமிழே!

இரம்யா ரவீந்திரன்



இராலே மாநகரில் நற்றமிழர் கூடலிலே
தமிழ்த்தென்றல் கமழுமிந்த கவியரங்க மேடையிலே
சுடாத சூரியனை சினேகனை நடுவிருத்தி
எண்கோளாய் சுழல்கின்றோம் தமிழன்னையை தோளுயர்த்தி

முக்கூடல் சிப்பிக்குள் பிறந்திட்ட தமிழ்முத்து
விண்தோன்றா அமுதமென வேர்விட்ட நல்வித்து
யாதுமாகி நின்றாய் தமிழேவெனும் பொருண்மையிலே
கவிபாட விழைந்தே வணங்குகின்றேன் சபையினையே

நான்முகனின் நெஞ்சிலுறை நாயகியின்
கைகளிலே கன்னலெனநீ விளைந்தாயோ
குமரிக்கண்டத்திலே சங்கம் கண்டு
கற்றறிந்தோர் சிந்தையிலேநீ கிளைத்தாயோ

கத்தும்கடல் தோணியேகி மொழிகட்கு
தாயுமாகி சொற்களீந்து கரம்சிவந்தாயோ
கணியன் காதலினால் கசிந்துருகி கேளிரென
மொழிந்ததனால் மூப்பில்லா முகம்பெற்றாயோ

ஆதியிலே வந்ததெல்லாம் பாதியிலே
பொலிவிழந்து போனவிடம் யார் பகர்வாரோ



உன்மேனியிலே மேகலையாய் மாற்றமதை
பூட்டுகிறாய் பூக்களிடம் புதுமை கற்றாயோ

வடமொழியே வண்மொழியாம் வாய்பேச்சு
வீரரெல்லாம் அலர்கூறி வேலெறிந்தபின்னே
சிந்துவெளி விட்டதெல்லாம் சங்கத்தமிழ்
தொட்டதென வளம்காட்டி வாகை சூடினாயே

காலத்தால் கரைக்கவொண்ணா கருத்தான
பனுவல்பல பெற்றிங்கே பாரில் உயர்ந்தாயே
சர்ப்பமாக சிறப்பு ழகரம் முப்புள்ளியை
சிரசில்சூடி மலைமகளின் பதியை ஒத்தாயே

வல்லினமும் மெல்லினமும் கொடியிடைமேல்
இடையினமும் சமத்துவமாய் பெயரில் சுமந்தாயோ
பித்தா எனவழைத்து பரமனையும்
பலசொல்லி வைதாலும் வாழ்விக்கும் தாயோ

நெற்றிக் கண்ணைக் காட்டிடினும்
நற்றமிழே வேதமெனும் நக்கீரப்படை அடைந்தாயோ
யானே கள்வனென்ற கோமகனின்
கொற்றம்சாய்த்து அறத்திற்கு காப்புமானாயோ

செம்மொழிக்கு இலக்கணமாய் சுட்டுகின்ற
தகுதியாவும் தன்னகத்தே தாங்கி நின்றாயே
உன்னருமை உணராத உணர்விழந்த
பேர்களுக்கு பகற்கனவே பாரில்நிறை வாழ்வே

அன்பெனும் மாமருந்தே மறத்துக்கும் மாற்றாகுமென
வள்ளுவமாய் மண்ணில் மலர்ந்தாயே
அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றாகுமென
அரியணைக்கும் சிலம்பில் உரைத்தாயே

குறிஞ்சியிலே கூவும்குயில் ஓசையிலே
குடிபுகுந்து ஐம்பூதங்களின் ஐயை ஆனாயே
மருதத்திலே யாழிசையாய் முத்தமிழே முன்பிறந்தாய்
வையமாளும் வளைக்கரமும் நீயே

வான்மழையை வரவேற்ற வண்ணமயில்
வனப்பெல்லாம் வஞ்சியுந்தன் பேரெழில்முன் வீணோ
ஒருபொருட் பன்மொழியாய் பல்பொருள்
ஒருமொழியாய் மொழிவானில் விடிவெள்ளியும் நீயோ

வடவேங்கடம் தென்குமரி இடையினிலே
இளைக்காமல் இணையமேறி தடம் பதித்தாயே
அருஞ்சொல் களஞ்சியமே கன்றாத
மொழிவளத்தால் நடமாடும் நாமகள் ஆனாயே

யாப்புக் கட்டுடைத்து புதுக்கவிதை ஏர்பிடித்தே
எளியோர்க்கும் அருள்கின்ற தாயே
மாற்றத்தின் முகவரியே முன்தோன்றிய மாமணியே
மரணமில்லா பெருவாழ்வாய் மலர்ந்ததாயே

நிலையில்லா நிலவுலகில் நீள்புகழை
நாட்டிவிட்டு அமுதமாக அகத்தில் உறைந்தாயே
கொற்றவையே குலக்கொழுந்தே தெவிட்டாத
தீஞ்சுவையே யாதுமாகி எங்கும் நிறைந்தாயே



# யாதுமாகி நின்றாய் தமிழே!

கவி படைப்பு கண்ணுத்துரை லோகேந்திரன் (லோகன் கண்ணுத்துரை)

எட்டுத் திசையும் பறையொலிக்க
உலகெங்கும் முரசொலிக்க
வீரத் தமிழன் பரணியில், வீறுகொண்டு
கயவர் களை கண்டு
துரோகிகள் சிரம் கொய்து-
குருதிதனில் வீரத் திலகமிட்டு
செங்கோல் ஆட்சியில்-
சோழன் மறத்தில்- அறத்தில்
அன்று! தலை நிமிர்ந்து நின்றது வீரத்தமிழ்!



பசுவின் நீதிக்காய் - சேய் கொடுத்த
மனுநீதி சோழனாய் -
பாகங்கள் பல வடித்தும்
தமிழன் அறத்தை - அதன் சிறப்பை
இனிதே இயம்பிய
வள்ளுவனின் அறத்துப் பாலாய்
நறுக்கென்று சிறார் புரிந்துணர
அவ்வையின் ஆத்திசூடியாய்
நியதியாய்-நீதி நெறியில்
நாலடியார் வாக்குகளாய்
மூன்றும் தரா் ஒருவா் - நல் ஆசானாய்
எம்-வழிகாட்டியாய்
அன்பில், பண்பில் - ஒரு சிறு கண்டிப்பில்
தாய் தந்தையாராய்
பாசமிகு பாட்டனாய் கதை பல சொல்லி
வார்த்தைகளில் வாழ்வை விளம்பிய
ஓர் மூதுரையாய்!

நீதி நெறிகள் வித்தாகி
தமிழ், ஆலகால விருட்சமாய்
விழுது பல கொண்டு
ஒழுக்கம் தாங்கி - நீதித்தராசாய்
நிமிர்ந்து நின்றது நீதித் தமிழ்!
காண்டம் பல வடித்த
வார்த்தைகளின் வித்தகர்
கம்பனாய் கவிகொண்டு இலக்கியமாய்
யாழ் கொண்டு - தமிழ் இசையில்
கலாச்சாரம் மெருகேற
பாரம்பரிய வளம் பெற
இருள் கொள் இவ்வுலகில்
எம் வழிகாட்டியாய்
கலங்கரை விளக்கமாய்




நாட்டுக் கூத்தென - பாமரரும்
இசையில் இயலும் கற்க
பறைகொண்டு தாளக் கட்டுகளில்
அவையமும் தமிழ் புகழ் பாட
இயல் இசை நாடகமாய்
கலையின் சிகரமாய்
மணம் பரப்பி நின்றது - முத்தமிழ்!

உரிமை நிலை தடுமாறிட
மண்ணே எமை கேள்விக் குறியாய் பார்த்திட
மரணமே வாசல் வரை வந்திட
குண்டுகள் கூரையைப் பெயர்த்திட
இறப்புகள் புள்ளி விபரங்களாய்
நாதின்றி, நாதியற்று - ஈழம்

அன்று நடுவீதியில் நின்ற போது
தேகத்தின் தெம்பாய் -
சுந்தர பாரதியின் - சுதந்திரக் கவியில்
உரிமைகள் உயிர் பெற்றன
ஆம்! சிரம் தாழ்த்தா மறத்தமிழனாய்
நிமிர்ந்து நின்றது அன்று சுதந்திரத் தமிழ்!

யாதுமாகி நின்றாய் தமிழே!
விரைவில் தமிழ் தேசம் ஒன்று தாராய் தமிழே!



# யாதுமாகி நின்றாய் தமிழே!



**கார்த்தீஸ்வரி வாழவந்தான்**
**இல்லினாய்ஸ்**

அன்னைவாய்மொழியாய் அறிமுகமானாய்!
அன்புத் தாலாட்டாய் தொட்டிலில் இட்டாய்!
பரிவின் பாசக் கையாய் உறு பசி ஆற்றினாய்!
அறம் வளர்க் கருவறையாய் அறிவள்ளித்தந்தாய்!
மனிதம் போற்றும் பணி ஒன்றேமறம் என்று உரைத்தாய்!
குழவிப்பருவத்தின் மழலைவிரல்களில் எழுத்தாகி முத்தமிட்டாய்!
அரிச்சுவடி சுவடுகளாய் பள்ளியில் அடி பதித்து உடன் நடந்தாய்!!
ஆழியின் அடியென தொன்மைகொண்டவள் நான் என்றாய்!
வியப்பின் விழி மூடும் முன்னேஇளமைமாறா இலக்கியம் இயைந்தாய்!!
ஐந்திணைநிலமும் ஐம்பொறி மெய்யும் இலக்கணத்தால் இணைத்தாய்!
நிலமும் பூவும் ஏன் காலமுமாய் அகக் காதல் சொன்னாய்!
திணையும் மாலையும் மாட்சியுற புற வெற்றி பறைந்தாய்!
அறிவுடையோன் ஆறேஉயர்வெனச் சுட்டிக் கல்விக்கண் திறந்தாய்!
செல்வத்துப் பயன் ஈதலென உதவியின் உன்னதம் உரைத்தாய்!
ஈயென இரத்தல் இழிந்தது என்று இடித்துரைத்துக் கடிந்தாய்!
முயற்சியின் முதுகில் ஏறி வெற்றிக் கனி பறி என்றாய்!
யானைபிழைத்த வேலாய் இலக்கின் உயரம் இமயம் என்றாய்!
பிறப்பொக்கும் என்று ஓங்கி ஒலித்துப் பிரிவினைசாடினாய்!
யாவரும் கேளிர் என்று ஒற்றுமைபேசி உலகக் குடியாய் உயர்த்தினாய்!
ஏதுமில்லா ஏகாந்த வெளியில் ஊழி உருவைஆராய்ந்தாய்!
சுழியின் தோற்றம் ஈன்று காலும் அரையும் எண்ணிக் கணிதக் கரைகண்டாய்!
கல்லும் மண்ணும் தோன்றலோடு உயிர் பரிணாமம் சொன்னாய்!
பக்தி இலக்கியப் பாசுரப் பாட்டிலும்
வானியல் பயில்வித்தாய்!
அறக் கூற்றாய் வெகுண்டு விரி குழலி சிலம்பில் அதிகாரச் செருக்கழித்தாய்!
பெண்ணியத்தின் முதல் குரலைமணியாய் ஒலித்து மேகலைஅணிந்தாய்!
கம்பனில் சொற்சுவையும் வள்ளுவ ஈரடியாய் பொருட்சுவையும் பரிசளித்தாய்!
மகாகவியின் சமத்துவ முண்டாசாய்,
புரட்சிக்கவியின் புதுமைப் பேனாவாய்ப் பரிமளித்தாய்!
பகுத்தறிவுப் பேழையாய்
அறவுரைப் பெட்டகமாய்
அழகுக் காதல் கவிமொழியாய்
உணர்ச்சிச் பெருக்கின் சிறுகதைகளாய்
வெற்றிச் செருக்கின் பெரும் புனைவுகளாய்
திரைமொழியின் உற்ற தோழனாய், திரைகடல் ஓடியும் என் பெரு திரவியமாய்
எனைசூழ்ந்த வெளியில் வளியாய்
என் உயிர்க் கூட்டின் உள் ஒளியாய்
யாதுமாகி நின்றாய் என் தாய்த்தமிழே!



# யாதுமாகி நின்றாய் தமிழே!

**ம.வீ.கனிமொழி**

ஐங்குறுநூறுகள் பெறுவதற்காகக்
கடல் தாண்டி வந்தவர்கள் நாங்கள்
அக்குறுந்தொகைக்காகவா
மதுரைக்காஞ்சி பற்றி அறியாதவரா
நீங்கள்
என்கிறீர்கள்
அக்குறைதீர்க்கவே
விண்ணோடும்
கடலோடும்
மண்ணோடும்
உடுக்களோடும்
தோன்றினும்
இன்றும் இளமையாள்
என் தமிழை
யாதுமாகி நின்றாய்த்
தமிழே
எனக் கவிபாட
முற்பட்டேன்

யாதுமானவள்
சொற்களுக்குள்
அகப்பட மறுத்தாள்
எழுத்தின் வடிவங்களைக்
குழைத்தும்



வாக்கியக் கயிற்றைத்
திருகியும்
முனைந்தேன்
ஓவியக்
கவியானாள்
கேளுங்கள்
சுற்றம் துறந்து
ஏதுமற்றவளாய்
வங்கக் கடலின்
ஈரத்தைஏந்தி
அட்லாண்டிக்
பெருங்கடல் அருகே
கால் பதித்த நொடி

முதல் அவளே
எனக்கு சுற்றமானவள்
சிலம்பின் சீற்றமிகு உரையில்
மணிமேகலையின் எழில் நடையில்
எட்டுத்தொகையின்
கூட்டுத் தொகைவரிகளில்
பத்துப்பாட்டின் மத்தள ஒலியில்
என் இரவுகளைநிறைத்து
என் உயிரைஉணர்வை
மீட்டியபடி உதிராமல்
துளிர்விட வைத்தவள் அவளே
யாதுமாகி நின்றவளுக்கும் எனக்கும்
கரைக்கும் கடலுக்கும்
உள்ள உறவு
பணிச் சுமைகள் அலைகழிக்கும்போது
இலக்கியக் கடலில் நீந்துகிறேன்
அவளேஎன்னைக் கட்டுமரமாய்க்
கரையேற்றுகிறாள்

அவளுக்கும் எனக்கும்
வானத்திற்கும்
மலைக்கும் உள்ள உறவு
அகன்ற அவள் இலக்கியவானில் மேகமென
மனம் உலா வருகையில்

தமிழ் மலையில் சற்றேஇளைபாற
வைக்கின்றாள்
தலைகோதுகின்றாள்
என் தேய்பிறைநாட்கள்
இரண்டடி நாலடியால்
அடியெடுத்து பயணிக்கின்றன
கட்டம் கட்டி நிறுத்த
வட ராசன்கள்
மிரட்டினாலும்
நடந்து நடந்து
தமிழ் நட ராசன்களை
பிரதியெடுக்கின்றாள்
தாளம் தப்பிய
மொழியெல்லாம்
தலைமேல் ஏற முனைய
சிப்பிக்குள் இருந்து
தாள முத்துகளை
உதிர்த்தவள்
பேகன் காத்த தமிழ் அவள்
சேரன் வளர்த்த தமிழ் அவள்
கரிகாலன் வடித்தெடுத்த தமிழ் அவள்
காக்கைப்பாடினியின் தோழி அவள்
அவ்வையின் நட்பு அவள்
பக்தி மொழியெனப் பூசை
அறைக்குள்
மட்டுமேஅடைபட
மறுத்து
சிந்து சமவெளியில் திரிந்து
கீழடியில் கிளைத்து இன்று
வட கரோலினா அவையில்
கவிபாடுவோர் நாவில் நடம் புரிகிறாள்
பழமைமட்டும்
அவள்
அடையாளமல்ல

புதுமையும் புரட்சியும்
தொடர்பவள் அவள்
கடல் விழுங்கியப்
பூம்புகாரை
அறிவு மிளிரும்
வள்ளுவர் கோட்டத்தை
வரைந்த கரங்களை
அவளேதந்தாள்
திருக்குறள் தலைமை
மாநாட்டு ஏற்பாட்டையும்
அவளேபகுத்தறிந்தாள்
எப்பக்கம் எதைத்
திணித்தாலும்
புகுத்தினாலும்
தூவென தீ
உமிழும்
அழற்கதிரின்
முகில் அவள்
போரின் மேகங்கள்
சூழ்ந்துள்ள பூவியில்
அவள் புறநானூற்று
வரிகளேபுத்துயிர்
ஊட்டுகின்றன
உண்பது நாழி
உடுப்பவைஇரண்டே
என்று காதருகே
கதைத்து
உரைத்து
உடைந்து
திகைத்து
போகும் கணங்களை
மீட்டுருவாக்கம் செய்கின்றாள்
உதிக்கின்ற உதயசூரியனே
உயிர்களின் அடிப்படை

அவ்வாறு உதிக்கின்ற
உதயசூரியன் போன்றவள்
தமிழ் எனக்கு
அவளேஎன்
மூச்சாகி
குருதித் துளியாகி
அணுக்களாகி
உடம்பின் திசுக்களாகி
வீசும் காற்றாகி
பொங்கும் கடலாகி
ஒலிக்கும்
அலையாகி
குளிரும் பனியாகி
மண் தொடும்
மழைத் துளியாகி
கடந்த பாதையின்
வழியாகி
கடக்கும் பயணத்தின்
துடுப்பாகி
ஒளிவீசும் நிலவாகி
நீந்துகின்ற ஆறாகி
ஆற்றின் சிணுங்கலாகி
துளிர்விடும் அரும்பாகி
மணக்கும் மலராகி
உதிரும் இலையாகி
தாமரைச் சருகாகி
துடிக்கும் கண்களாகி
கண்களின் காட்சியாகி
மூச்சின் வளியாகி
எதையும் தாங்கும் வலிமையாகி
எனக்குள் யாதுமாகி
நிற்கின்றாள்
தமிழ் அவளேயாதுமாகி
நிற்கின்றாள்

# யாதுமாகி நின்றாய் தமிழே!



சங்கு முழங்க, சமுத்திரம் பொங்க,
சரித்திரம் விளங்க, அமெரிக்கா துலங்க,
வட கரோலினா இலங்க, எங்கெங்கும் எழில் படைக்கும்
என் தமிழே! வணக்கம்!

அன்னைத் தமிழ், அன்புத் தமிழ், ஆதித் தமிழ், தொன்மைத் தமிழ்,
இன்பத் தமிழ், இனிமைத் தமிழ், இணையில்லா மேன்மைத் தமிழ்,
உலகம் போற்றும் உயர்ந்த தமிழ், உயிரோடு கலந்த உணர்வுத் தமிழ்,
எந்தையும் தாயும் மகிழ்ந்த தமிழ் ஏற்றம் மிகு வரலாறு கொண்ட தமிழ்,
ஓங்கு புகழ் புலவர்கள் பாடும் தமிழ், ஒப்புயர்வில்லா நடுவர் உமிழும் தமிழ், அலைகடல் கடந்து, விலைமதிப்பில்லா நிலை உயர்ந்து யாதுமாகி நிற்கும் தமிழே!
தஞ்சைக் கோபுரமாய் உயர்ந்து, கம்போடியா வரை பரந்து
தமிழகத்தில் மிளிர்ந்து, தமிழ் ஈழத்தில் தலை நிமிர்ந்து
பாரதியார் மீசையில் துடித்து பாஸ்கரின் கவிதையில் வெடித்து
பல மொழிகளால் கலையிழந்தாலும் யாதுமாகி நிற்கும் தமிழே!

உரிமை கேட்டதால் உதைவாங்கி, தமிழன் என்பதால் உயிரிழந்து

சிறுமை கொண்ட உலகமே ஒதுங்க இடமின்றி சேர்ந்தழித்த போது
பதுங்கு குழிகளில் புதையுண்டு, செல் விழுந்து இனம் அழிந்து
உறவிழந்து உடமையும் இழந்து, சின்னப்பூக்கள் சிதறியழிந்து
அகதியாக எங்கெங்கோ அலைந்து அவதிப்பட்டு அல்லலுற்று
வலியோடு விழிநீர் சுமந்தும் எழுந்து யாதுமாகி நின்றாய் தமிழே



ஈழத்தில் புதைந்த வீரத்தில், உறைந்த குருதியின் மண்ணதில்
அகதி முகாம் அலறலில்,அன்று சோத்துக்கு கையேந்தும் வேளையில்
முள்ளிவாய்க்கால் சோகத்தில் பெரும் குண்டு போடும் நேரத்தில்
கொள்ளி போட முடியாத உறவுகளின் தணியாத தாகத்தோடு
கன்னியர்கள் கற்பிழந்த போதிலும் யாதுமாகி நின்றாய் தமிழே!

வள்ளுவர் வடித்த ஏட்டில், கம்பன் காட்டிய காவியத்தில்
கலைஞர் எழுதிய கரங்களில் கபிலரின் கவிதைகளில்
சென்னைத் தெருக்களில் மாடுண்ணும் சுவர் ஒட்டிகளில்
தி நகர் கடைத் தெருவினில், தள்ளாடும் குடிப்போதையில்
களி நடம் புரிந்து எங்கும் யாதுமாகி நின்றாய் தமிழே!

வள்ளுவன் தேன் குறளில் வாகீசன் துள்ளிசையில்
வேடன் கலக்கும் பாட்டினில், சீறும் சீமான் பேச்சினில்
காதலர் களிப்பினில் கால் கொலுசின் சினுங்களில்
கிராமத்து வாய்க்காலில் தாயவளின் இனிய தாலாட்டில்
இமான் இசையிலும் இங்கு யாது மாகி நின்றாய் தமிழே
ஓட்டொக்காரர் பேரத்தில் பேருந்து நிலையக் கூவலில்

கோயில்கள் முன் வாசலில் குமரன் சில்க் படிகளில்
கர்நாடகக் குழப்பத்தில் கமலஹாசன் கோபத்தில்
எங்கும் ஒலித்து மொழிகளுக்குத் தாயுமானவளாய்
கீழடியில் புதைந்தும் யாது மாகி நின்றாய் தமிழே



**சிகாகோ பாஸ்கர்**



# யாதுமாகி நின்றாய் தமிழே!

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
என்று
வாசகரின் வார்த்தைகளில்
திருவாசகரின் வார்த்தைகளில்
பாலாய், தேனாய், அமுதாய் வழிந்தோடிய தமிழே
நீயே நின்றாய் தமிழே, அவை
யாதுமாகி நின்றாய் தமிழே.

மொழி
அன்பைக்காட்டவும் மொழி
ஆறுதல் சொல்லவும் மொழி
இடித்து காட்டவும் மொழி
ஈடுபடவும் மொழி
உரை நிகழ்த்தவும் மொழி
ஊக்கமளிக்கவும் மொழி
எடுத்துக்கூறவும் மொழி
ஏனென்று கேட்கவும் மொழி
ஐயம் தீர்க்கவும் மொழி
ஒடுக்குமுறை ஒழிக்கவும் மொழி
ஓட்டு கேட்கவும் மொழி
வலிகளுக்கு ஔடதமாய் மொழி
மொத்தத்தில்
வாழ்க்கைக்கு வழித்தடமாய் மொழி

மழைத்துளி மழைத்துளியாய்
இருத்தல் இயல்பு
மொழி மொழியாய் இருத்தல் இயல்பு
கோடி மழைத்துளிகளில்
ஒரு துளி சிப்பிக்குள் முத்தாய் மாறும்
கண்ணீர் அதுபோல்
பல்லாயிரம் மொழிகளில்
ஒரு மொழி மட்டும் பழுத்து
உணர்வாய், உயிராய், பண்பாடாய், கலாச்சாரமாய்,
சமூகமாய், வாழ்வாய் பரந்து விரிந்தது கண்டோம்.
அதுவே உலகின் முதன்மொழி,
அதுவே நம் தாய்மொழி, தமிழ்மொழி!
யாதுமாகி நின்றாய் தமிழே!



**ராஜராஜன் லெட்சுமிகாந்தன்**

ஒலிகளின் அடிப்படையில் உருவானவை உலகமொழிகள்
உணர்வுகளின் அடிப்படையில் உருவானது தமிழ்மொழி
அ, ஆ வலியாம்
இ, ஈ சிரிப்பாம்
உ, ஊ காரமாம்
எ, ஏ கோபமாம்
ஐ வெட்கமாம்
ஒ, ஓ ஆச்சரியமாம்
ஔ வக்கனையாம்
ஃ விக்கலாம்
உணர்வுகள் யாதுமாகி நின்றாய் தமிழே!



காதல் மொழி பேசுகையில் நீ இனிக்கிறாய்
கயவரைச் சாடுகையில் கார்ப்பாய் கசப்பாய்
நடுவு நிலையில் நீ உவர்ப்பாய்
சமூக அநீதிக்கெதிரில் புளிப்பாய் துவர்ப்பாய்
சுவைகள் யாதுமாகி நின்றாய் தமிழே!

அறிவொளியேற்றிடும் சூரியனாய்
மனமதனை வருடிவிடும் சந்திரனாய்
விடியலை வரமாக்கிய விடிவெள்ளியாய்,
வான்வெளியாய்
வாழ்க்கை பாடத்தில் அண்டமாய், பேரண்டமாய், அண்டசராசரமாய்
யாதுமாகி நின்றாய் தமிழே!

கோபம் கொண்ட கோடையாய்
வாசம் வீசும் வசந்தமாய்
மேனியை நனைக்கும் கார்காலமாய்
பூமியை குளிர்விக்கும் கூதிர்காலமாய்
காலங்கள் யாதுமாகி நின்றாய் தமிழே!

சமூக அவலம் சுட்டெரிக்கும் நெருப்பு நீ
அறிவு தாகம் தணிக்கின்ற நீரும் நீ
கற்பனையில் பரந்து விரியும் வானம் நீ
கவிதை வாங்கிவர காரணமாயிருந்த காற்றும் நீ
(காற்று வாங்க போனேன் கவிதை வாங்கி வந்தேன்)
பூமி நீ, மொத்தத்தில் பூதங்கள் யாவும் நீ
யாதுமாகி நின்றாய் தமிழே!

உலக மக்கள் பேசுகின்ற மொழிகள் ஏழாயிரம்
நாற்பது நாட்களுக்கொரு மொழி அழிகிறதாம் பாவம்.
உலக மக்கள் பேசுகின்ற மொழிகள் ஏழாயிரம்
ஆனால்
உலகம் பேசுகின்ற ஒரு மொழியோ தமிழ்மொழி
தன்னை தக்க வைக்க போராடும் பலமொழிகள் மத்தியில்
நம்மை தழைக்க வைத்து தாலாட்டிய தமிழ்த்தாய்!

கன்னியாய் கிழவியாய்
சின்னதாய் பெரியதாய்
எளிமையாய் கடினமாய்
உண்மையாய் பொய்யாய்
இருப்பதாய் இல்லாததாய்
மொத்தத்தில் எல்லாமாய்
யாதுமாகி நின்றாய் தமிழே!
நீயின்றி
நிர்கதியாய் நிற்போம் நாமே!

மொழிகளின் மாநாட்டில்
கோனாகி நிற்கிறாய் நீ!
மொழிகளின் மாநாட்டில்
கோனாகி நிற்கிறாய் நீ!

இச்சான்றோர் சபையில்
நானாகி நிற்கிறாய் நீ!
இச்சான்றோர் சபையில்
நானாகி நிற்கிறாய் நீ!

யாதுமாகி நின்றாய் தமிழே!
வாழிய வாழிய வாழிய நீ!



# யாதுமாகி நின்றாய் தமிழே!

தொப்புள் கொடி உறவென வந்த தமிழே!
அன்னையிடம் தாய்ப்பாலோடு தமிழ் பாலும் அல்லவா பருகினேன் .
உயிர் கொடுத்த தாயும்,
மெய் சுமந்த தந்தையும்,
உயிர் மெய்யாக உன்னை என்னுள் கலந்தார்கள்.

தொட்டு செல்லும் தென்றலோ,
சுமந்து வந்த தமிழை,
சுவாசமாய் என்னுள் நிறைத்தாள்!
தூரலிட்ட மேகமோ,
தமிழ் பயிரை விளைத்து,
உணர்வாகி நின்றாள்!!
ஒளியோ ஒலியோ முதலில் நீயே ……

கைப்பிடித்து,
மை தொட்டு,
தலை குனிந்து கற்றேன் உன்னை!
கை தூக்கி,
மெய் சிலிர்க்க,
தலை நிமிர செய்தாய் என்னை!!
ஆணவத்தை அடிபணிய செய்தாய் நீ



**கார்த்திக் பாலசுப்பிரமணியன்**

இருந்தும் திமிரொன்று பிறக்கும்
தமிழன் என்று சொல்லும் போது!!!

தேடல் கூடக் கூட,
தொன்மை நீளும் தமிழே…
இளமை மட்டும் மாறா என் உயிரே,
தனக்கென வாழும் உயிர்களுக்கு இடையில்,
தலைமுறைகள் வாழ நீ மட்டுமே இருக்கிறாய்!!!

நீயும் எத்தனை இடையூறுகளை சந்தித்தவள்??
பேசும் பலர் உன்னை ஏசவும் அல்லவா செய்கிறார்கள்??

வாழ்க்கை நெறிமுறைகளை கூறுவதோடு மட்டுமல்லாமல்,
வாழ்ந்து காட்டுபவள் நீ!
அரசனோ ஆண்டியோ,
அன்போ வீரமோ,
கல்வியோ காதலோ,
அறம் என்னும் ஒற்றை சொல்லில் கட்டினாய் !!

பள்ளிக்கூட காலத்தில் மதிப்பெண்கள் குறைந்தேன்,
உன்னால் நான் பல மேடைகள் ஏறினேன்,
மதிப்பையும் கூட்டினாய்!

கல்லூரி சேர்கையில் வீட்டை விட்டு முதல் முறை தனியே ,
நீயே என் அறை தோழன் ஆனாய்!

கடல் தாண்டி வந்தேன்,
கலாச்சாரத்தை என்னோடு கட்டி வைத்தாய்!!

நான்கு ஆண்டுகளுக்கு முன் என் தாயை இழந்தேன்,
அவள் தந்த ஸ்பரிசம் நீ தந்தாய்!
ஓர் ஆண்டிற்கு முன் என் தந்தையை இழந்தேன்,
என்னுள் வலிமை கொண்டு நீ எழுந்தாய்!!

எதையோ எதிர்பார்க்கும் மற்ற உறவுகளுக்கு முன்,
எதையும் எதிர்பாராமல்,
கொடுப்பதற்கு என்று மட்டுமே நீ வந்தாய்!!
புன்னகையோ, புலம்பலோ,
கண்களில் வழியும் நீர் உதடு வரை வருவதற்கு முன்,
முத்தம் கொடுத்து கண்ணீர் துடைத்தாய்!

யாதுமாகி நிற்கிறாய் என் தமிழே,
எங்கும் என்னுள் நீ நிறைந்தாய்,
என் உயிரில் கலந்து விட்டாய் தமிழே,
என் வாழ்வை இன்பமாக்கி விட்டாய்,

இனி நீயும் இல்லை என்றால்,
தமிழே….
நானும் இல்லை அன்றோ!!

நன்றி



# கவியரங்கம் நிறைவு:

பெரும் அடர் கவிமழை
பெய்த நிலத்தில்
நிற்கின்றேன்...

எப்புறமும் தமிழ் வாசம்
எனை தழுவ
சிலிர்கின்றேன்..

சொற்களே வாள்களாய்
சுழன்ற கணத்தை
ரசிக்கின்றேன்...

சுவாசிக்க தமிழ் போதும்
அதனாலேயே
வசிக்கின்றேன்...

முத்தான கவிஞர்கள்
புத்தாக்கம்
தந்தார்கள்...

சத்தான கருத்துக்களை
வித்தாக
தந்தார்கள்...

சித்தாந்த சிந்தனையால்
சிறகடித்து
பறந்தார்கள்...

யுத்தத்தை மொழியாலும்
சில நொடிகள்
புரிந்தார்கள்...

கவிக்கேட்டோர் மகிழ்ந்தார்கள்...
கேளாதோர்
கசிந்தார்கள்...
மொழியுறவோர்
நெகிழ்ந்தார்கள்...
மொழி துறவோர்
நெலிந்தார்கள்...

எவரறிவார்
எவர் புரிவார்
என் தமிழே உன் ஆதி...

இயங்குகின்ற
இவ்வுலகை...
இயக்குவதே உன் நீதி...

உலக மொழி
அனைத்தையுமே
பிரசவித்த பெருந் தாயி...

எவர் புகழ்வார்
எவர் இகழ்வார்
உதைத்தெழுந்து வா தாயி...

பகைவருக்கும்
அருள் புரிவாய்
பரம்பொருளே... என

இறைவனுக்கும்
ஆணையிட்ட
மொழியரசி நீ தாயி...

கிமுக்கும்
கிபிக்கும்
சிக்காத வரலாறு...

கீழடியின்
வேரடியை
ஏற்க இங்கே தகராறு...

விசும் பெங்கும்
விளையாடும்
காற்றலையில் உன் சந்தம்...

விண்வெளியில்
விஞ்ஞானம்
பேசும் மொழி உன் சொந்தம்...

அசைகின்ற
இலைநுனியில்
இசைகின்ற கவி பந்தம்...

யார் நம்மை
பலித் தீர்ப்பார்
நமக்கிந்த பூவிச் சொந்தம்...

நீள்வட்டப்
பாதையிலே
நீ நடந்த வழித்தடம்தான்...

பூமத்திய
ரேகையாக

பூவி மய்யம் கொண்டிருக்கு...

பாடும் பொருள்
நீயாக...
பாடும் குரல்
நீயாக...
பாடும் பாடும்
நீயாக...

நோக்கும் திசை
யாவிலும்...
கேட்டும் அசை
நீயாக...

நீக்கமற
நிறைந்தவளே...
யாக்கையுயிர்
காப்பவளே...

வையமெல்லாம்
உன் மக்கள்
வாழ வழி வகுத்தவளே...

வள்ளுவனின்
விரல் வழியே
வாழ்க்கை நெறி தொகுத்தவளே...

ஒரு செல்
உயிரினமும்...
உயர்ந்தோடும்
விஞ்ஞானமும்...
உனக்குள்ளே



அடங்குமென்று
உலகத்தோர்
அறிவார் இன்று...

பேரண்ட
பெரும்வெளியில்
பெரும் குடும்பம்
கொண்டவள் நீ...

பேரிடர்
பெரும் வஞ்சம்
பல கடந்து
நின்றவள் நீ...

முதலாம் நூற்றாண்டில்
தொல்காப்பியம்...

இரண்டாம் நூற்றாண்டில்
சங்க இலக்கியங்கள்...

மூன்றாம் நூற்றாண்டில்
திருவாசகம் ...

நான்காம் நூற்றாண்டில்
ஆசாரக்கோவை ...

ஐந்தாம் நூற்றாண்டில்
பெருங்கதை...

ஆறாம் நூற்றாண்டில்
கல்லாடம்...

ஏழு மற்றும் எட்டாம் நூற்றாண்டில்
தேவாரம்...

ஒன்பதாம் நூற்றாண்டில்
ஆழ்வார் பக்தி பாசுரங்கள்

பத்தாம் நூற்றாண்டில்
சீவக சிந்தாமணி ...

பதினோராம் நூற்றாண்டில்
பெரிய புராணம்...

பன்னிரெண்டாம் நூற்றாண்டில்
கந்த புராணம், கம்பராமாயணம்...

பதிமூன்றாம் நூற்றாண்டில்
சிவஞான போதம்...

பதினான்காம் நூற்றாண்டில்
தல புராணம்...
பதினைந்தாம் நூற்றாண்டில்
வில்லிப்புத்தூரார் பாரதம்...

பதினாறாம் நூற்றாண்டில்
திருவிளையாடல் புராணம்...

பதினேழாம் நூற்றாண்டில்
தேம்பாவணி, சீறாப்புராணம்...
பதினெட்டாம் நூற்றாண்டில்
தாயுமானவர் பாடல்கள்...

பத்தொன்பதாம் நூற்றாண்டில்
வள்ளலார் பாடல்கள்...

இருபதாம் நூற்றாண்டில்
மகாகவி பாடல்கள்... என

பெரும் பயணம்
செய்து வந்து
யுகப் புரட்சி
வென்றவளே...

உலகத்து
மொழிகள் எல்லாம்...
ஒன்றாக
சேர்ந்து உன்னை...
வென்றாட
நின்றாலும்...

இப்புவி
சுழலும் வரை...
உனைவெல்ல
முடியாது...

நிலமகள்
இதயமெங்கும்...
நீண்டோடும்
எல்லைக்கோட்டை....

தாண்டி வாழும்
பெருங்கூட்டம்...
தமிழே... உன்
தலைமுறை தான்...

ஒன்றாக
இரண்டாக
பத்தாக
நூறாக...

பிரிந்தோடி
வாழ்ந்தாலும்...
தாய்க் கொரு
இழிவென்றால்...
வாளெடுப்போம்
போர்தொடுப்போம்..

உன்னாலே
உண்டான ....
மொழியுறவால்
ஒன்றானோம்...

உனைப்பாடி
உனைப்பாடி...
பெரும் போதை
உண்டானோம்...

உன்னினத்தை
துண்டாடி...
கொண்டாட
காத்திருக்கும்...

ஒருவரையும்
விட மாட்டோம்...
எங்கள் சினம்
வேறுக்கும்...

உலகமே
ஓரணியில் ...
நின்றாலும்
போர் தொடுக்கும்...

உனது இனம்
ஓர் நாளில்...
உயர்ந்ததென
பேரெடுக்கும்....

மொழியாலும்
இனத்தாலும்
பிரித்தாளும்
பேரிடர்கள்

நிறத்தாலும்
குலத்தாலும்...
பகைத்தாளும்
பாதகங்கள்...

ஒரு போதும்
எம் இனத்தை...
ஒழித்துவிட
முடியாது...

உருளும் புவி
துகள்கலாக...
ஆனாலும்
அழியாது...

மொழிக் கெல்லாம்
தாய்மொழியாய்
எமது மொழி
இருக்குதென்று...

உலகத்தின்
செவிகளுக்கு...
உரக்க சொல்வோம்
நாம் இன்று...

தமிழ் படிக்க
தமிழ் படிக்க
தலைக் கனம்...

அது தவறில்லை
தமிழ்படி
வழிபிறக்கும்...

யாதுமாகி
நின்றவளே...
எனை அணைத்து
கொண்டவனே...

நான் உன்னை
கொஞ்சுவதும்...
நீ என்னை
மிஞ்சுவதும்

தொடரட்டும்
விடைபெறுவோம்...
மறு களத்தில்
நாம் தொடர்வோம்...








## ஒற்றைச் சிறகு ஓவியா நாவலுக்கு பாலசாகித்ய புரஸ்கார் விருது - 2025

எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன் தனது குழந்தைகள் நாவலான "ஒற்றைச் சிறகு ஓவியா"விற்காக தமிழ் மொழிப் பிரிவில் 2025 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமியின் பால சாகித்ய புரஸ்கார் விருதைப் பெற்றுள்ளார். பாரதி புத்தகாலயத்தின் முத்திரையான "புக்ஸ் ஃபார் சில்ட்ரன்" நிறுவனத்தால் 2019 இல் வெளியிடப்பட்ட இந்த நாவல், கற்பனை, சூழலியல் மற்றும் சமூக-அரசியல் கருப்பொருள்களின் கூறுகளைக் கலக்கிறது. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விஷ்ணுபுரத்தைச் சேர்ந்த திரு. சரவணன், தற்போது தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் குழந்தைகள் பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருகிறார். நவம்பர் 14 அன்று புது டெல்லியில் பால புரஸ்கார் விருது விழா நடைபெறவுள்ளது

## "கூத்தொன்று கூடிற்று" என்ற சிறுகதைக்கு யுவ புரஸ்கர் விருது - 2025



மதுரையை சேர்ந்த எழுத்தாளர் லட்சுமிஹர்க்கு 2025 ஆம் ஆண்டுக்கான யுவ புரஸ்கர் விருது "கூத்தொன்று கூடிற்று" என்ற சிறுகதை தொகுப்பிற்காக சாகித்திய அகாடெமி இந்த விருதை வழங்கியுள்ளது. வட அமெரிக்கத் தமிழ்சங்கப் பேரவை எழுத்தாளரின் படைப்பு பணிகள் மென்மேலும் வளர லட்சுமிஹரை வாழ்த்துகிறது.

